ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

பிப்ரவரி—1963

அரசாங்க விருதுபெற்ற
திரு. C. A. மரியண்ணு, J. P.

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBAKKALVI" OFFICE

94-95, New Street, Mannady. Madras-1

~~POST BOX No. 1818.~~ PHONE NO. 24544.

★

"ஆரம்பக் கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் எமது "திரு. வி. க. தமிழ் வாசகங்களை" அல்லது "வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 100-க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், ஆரம்பப் பாடசாலைகளுக்கு "ஆரம்பக் கல்வி" மாதப் பத்திரிகை இனாமாக மாதா மாதம் அனுப்பி வைக்கப்படும்.

ஆரம்பப் பள்ளிகளுக்கான எமது வெளியீடுகள் :

திரு. வி. க. தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் :

பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	5	0	3	28-5-'58
~~இரண்டாம் வகுப்பு~~	0	6	0	3	28-5-'58
மூன்றாம் வகுப்பு	0	8	0	3	28-5-'58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	1	0	0	11	18-5-'60

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்

முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 4 அணா

மலர் 25 } பிப்ரவரி 1963 { இதழ் 2

ஆரம்பப் பள்ளிகளுக்கு மாபெரும் ஆபத்து!

சென்னையில் மாநாடு—மார்ச்சு மாதத்தில்!

தனியார் பள்ளி நிர்வாகிகாள் !
திரள்திரளாக வாருங்கள் !

"ஈடு இணையற்ற பணி புரியும் எழில்மிகு நிறுவனங்கள்"

"எதிர்காலக் குடிமக்களை உருவாக்கித் தரும் நிகழ்கால உலைக் கூடங்கள்."

"நாடும் ஏடும் ஒருங்கே புகழ வேண்டிய நல்லறிவுக் கருவூலங்கள்."

"தென்னாட்டில் கல்வியை முதலில் பரப்பத் தொடங்கிய பொன்னான அமைப்புகள்."

"எந்நாளும் நாம் நன்றியுடன் பாராட்ட வேண்டிய கண்ணான நிலையங்கள்."

"சிறந்த கல்வி நிலையங்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதற்கான உயர்ந்த எடுத்துக்காட்டுகள்."

இப்படியெல்லாம்தான் பாராட்டு மொழிகள் வந்து குவிந்தபடி இருக்கின்றன—தமிழ் நாட்டில் உள்ள உதவிபெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு.

நாட்டை ஆளும் அமைச்சர்கள்முதல் வீட்டை ஆளும் குடும்பத் தலைவர்கள் வரை, பெரும் புகழ் பெற்றுத் திகழும் அரசியல் தலைவர்கள் முதல் அமைதியான முறையில் அருந்தொண்டு ஆற்றி வரும் கல்வித் துறை வல்லுநர்கள்வரை, அளவற்ற அதிகாரம் படைத்த அரசாங்க நிர்வாகிகள் முதல் இலட்சக்கணக்கான படிகள் விற்பனையாகும் பத்திரிகைகளின் ஆசிரியர்கள்வரை, எல்லோருமே, உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் எழிலையும் ஏற்றத்தையும் உயர்வையும் ஒப்பற்ற தொண்டையும் போற்றிப் புகழ்ந்து பாராட்டத் தான் செய்கிறார்கள்.

செல்வமும் செல்வாக்கும் பதவியும் அந்தஸ்தும் அறிவும் ஆற்றலும் படைத்த பெருமக்கள் அனைவரிடமிருந்து உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளுக்குப் பாராட்டுத் தாள்கள் கிடைத்தபடிதான் இருக்கின்றன. அதை யாரும் மறுக்க முடியாது. வாழ்த்துரை வெண்பாக்கள் வந்து குவிந்தபடிதான் இருக்கின்றன. அதை யாரும் இல்லையென்று சொல்லிவிட முடியாது. போற்றித் திரு அகவல்கள் பலவற்றை வாசித்தபடிதான் இருக்கிறார்கள். கிடையாது என்று இயம்பிவிட முடியாது.

உண்மைதான்! பாராட்டு, அதன் முழு அளவில் உதவிபெறும் ஆரம்பப்பள்ளிகளுக்குக் கிடைக்கிறது. ஆனால் அந்தப் பள்ளிகள் ஓங்குபுகழ் எய்தி ஒளி வீசித் திகழ வேண்டுமானால் இந்தப் பாராட்டு மட்டும் போதுமா? ஒரு நாளும் போதாது. அந்தப் பள்ளிக்கூடங்கள் யாவும் சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற வேண்டுமானால்—அந்தக் கல்வி நிலையங்களால் தமிழ்த் திரு நாட்டுக்குக் கிடைக்க வேண்டிய முழுப் பலனும் சிந்தாமல் சிதறாமல் கிடைக்க வேண்டுமானால்—அன்றலர்ந்த செந்தாமரைகள் எனக் காட்சி தரும் சின்னஞ் சிறு பிள்ளைகளை அறிவாற்றலும் பொறுப்புணர்ச்சியும் மிக்க குடிமக்களாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்யும் அப் பள்ளிகளின்

தொண்டு தங்கு தடையின்றித் தொடர்ந்து நடைபெற வேண்டுமானால், அவற்றிற்குப் பாராட்டு மடல்கள் மட்டும் கிடைத்தால் போதாது; உருவான உதவியும் கிடைத்தாக வேண்டும். உதவி கிடைக்கிறதோ இல்லையோ, புதுப் புதுத் தொல்லைகளும் துயரங்களும் இடையூறுகளும் ஆபத்துகளும் தோன்றித் தோன்றி அவற்றைத் துளைக்காமலாவது இருக்க வேண்டும்.

ஆனால் நடை முறையில் காட்சி அளிக்கும் நிலைமை என்ன?

உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஆபத்துகள் அடுக்கடுக்காக வந்தபடி இருக்கின்றன—சென்ற பத்து ஆண்டுகளாக.

ஓர் ஆபத்து தீர்ந்தால் மற்றொன்று—அந்த ஆபத்து அகல்வதற்குள்ளேயே வேறொன்று—இந்த இரண்டு ஆபத்துகளுக்கும் துணையாக இன்னொன்று என்கிற வகையில் ஆபத்துகள், தொடர்ச்சியாக, ஒன்றன்பின் ஒன்றாக, வரிசை வரிசையாக வந்தபடி இருக்கின்றன.

எந்த நேரத்தில் எத்தகைய புதிய ஆபத்து தோன்றுமோ என்கிற அச்சம் ஆட்டிப் படைத்தபடி இருக்கிறது—ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளை.

ஆபத்துகள் இவ்வாறு அணிஅணியாக வந்துகொண்டிருக்கிற காரணத்தால்தான் சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்த உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகள் பல மூடப்பட்டுவிட்டன. புதிதாகத் தொடக்கப்பள்ளிகள் எவற்றையும் தொடங்கி நடத்தத் தனியார் எவரும் முன்வராமல் இருப்பதற்குரிய காரணமும் இதுதான்.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னால் தமிழகத்தில் இருந்த ஆரம்பப் பள்ளிகளின் மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழப் பாதி அளவு எண்ணிக்கை, உதவிபெறும் தனியார் ஆரம்பப் பள்ளிகளாக அமைந்திருந்தன.

ஆனால் இந்தியா விடுதலை பெற்ற பின்னரோ அவற்றின் எண்ணிக்கை சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்து தற்போது, மொத்தத் தொடக்கப்பள்ளிகளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி மட்டுமே உதவிபெறும் பள்ளிகளாக அமைந்துள்ளன.

உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிற விபரீத நிலைமை உருவாகி வளர்ந்து வருவது, சென்ற பத்தாண்டுகளாகத்தான்.

அதுபோலவே, கல்விக்கூடங்களில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் மிகவும் குறைந்துவிட்டது என்கிற பொதுப்படையான குற்றச்

சாட்டு பல்வேறு சாரரானும் பலமான முறையில் எழுப்பப்பட்டு வருவதும் சென்ற பத்தாண்டுகளாகத்தான்.

இந்த இரண்டு உண்மைகளையும் ஒன்ருக வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்போது மற்ருேர் உண்மை தெளிவாக விளங்காமற் போகாது. தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருவதும், அந்தப் பள்ளிகளின் வளர்ச்சிக்கு இடையூருக இருக்கின்ற ஆபத்துக்களின் வகையும் தொகையும் பெருகிக் கொண்டே இருப்பதும்தான், கல்வியின் தரம் குறைந்து வருவதற்கான முக்கியமான காரணம் என்பதே அந்த உண்மை.

அரசாங்கத்தால் நேரடியாக நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிகள்,

நகராட்சி மன்றங்கள் — ஊராட்சி மன்றங்கள் முதலிய உள்ளாட்சி நிறுவனங்களால் நடத்தப்படும் ஆரம்பப் பள்ளிகள்,

ஆகிய இவற்றில் அளிக்கப்படுகிற கல்வியின் தரத்தை விடத் தனியாரால் நடத்தப்படும் ஆரம்பப்பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம் மிகவும் உயர்வாக இருக்கிறது என்பது கல்வித்துறை வல்லுநர்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிற உண்மை.

அதுமட்டுமல்ல.

அரசாங்கம், நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் ஆகிய நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளிகளால் அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவைவிடத் தனியாரால் நடத்தப்படும் பள்ளிகளால் அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு மிகவும் குறைவு என்பதும் எல்லோருக்கும் தெரிந்துள்ள முக்கியமான உண்மை.

ஆம்! குறைந்த செலவில் உயர்ந்த தரமுள்ள கல்வியை அளிக்கும் சிறப்புமிக்க நிறுவனங்கள், தனியார் பள்ளிக் கூடங்கள்.

உண்மை இப்படி இருக்கிற காரணத்தால், தற்போது உள்ள தனியார் பள்ளிக்கூடங்களுக்குப் போதுமான அளவில் பண உதவியையும் பிற உதவிகளையும் அளித்து அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டியது தமிழ் நாட்டு அரசாங்கத்தின் தலை சிறந்த கடமை ஆகும். புதிய புதிய தனியார் ஆரம்பப் பள்ளிகள் ஆங்காங்கே தோன்றி வளர்ந்து செழித்துப் பொலிவதற்குத் தேவையான உதவிகளை உள்ளன்போடு அளித்து மகிழ்வதும் அரசாங்கத்தின் கடமையாக இருக்கவேண்டும்.

இன்னின்ன செயல்களை, இன்னின்ன காரணங்களால் இன்னின்னார்தான் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள் என்பதைத் தெளிவாகக் கண்டறிந்து, அந்த அந்தச் செயல்களை அவரவர்களிடம் விடுவதே சாலச் சிறந்த முறையாகும் என்னும் கருத்தைத் திருவள்ளுவப் பெருந்தகையார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே அழகுபடத் தெரிவித்திருக்கிறார் அல்லவா?

> "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
> அதனை அவன்கண் விடல்."

என்னும் திருக்குறள் பொன்மொழி, அந்த அரிய நூல் தோன்றிய அந்தக் காலத்துக்கு மட்டுமல்ல, இந்தக் காலத்துக்கும் எந்தக் காலத்துக்கும் பொருந்தும் அல்லவா?

அந்தப் பொன்மொழி காட்டும் நன்முறையின்படி நடப்பதாக இருந்தால், தமிழ்நாட்டு அரசாங்கம், ஆரம்பக் கல்வியை விரைந்து வளர்க்கும் அரும் பொறுப்பின் பெரும் பகுதியைத் தனியார் தொடக்கப் பள்ளிகளிடமே விடவேண்டும். இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன்கண் தானே விடல் வேண்டும்?

ஆனால் ஏனோ தெரியவில்லை, சென்ற சில ஆண்டுகளாகவே, தமிழக அரசியலார், தெரிந்தோ தெரியாமலோ, தனியார் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஆபத்துகளை விளைவிக்கவல்ல நிலைமைகளை உருவாக்கியபடி இருக்கிறார்கள்.

ஏற்கெனவே உள்ள பல்வேறு ஆபத்துகள் போதா என்றோ என்னவோ புதியதோர் ஆபத்து புறப்பட்டிருக்கிறது சென்ற சில மாதங்களாக.

இந்தப் புதிய ஆபத்து, கிராமப் பகுதிகளில் உள்ள தனியார் ஆரம்பப் பள்ளிகளுக்குப் பெரியதொரு நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் என்கிற புதிய உள்ளாட்சி அமைப்புகள் சில மாதங்களுக்கு முன்னால் தமிழ்நாட்டுக் கிராமப் பகுதிகளில் ஏற்பட்டன அல்லவா? அப்படி அவை ஏற்படுவதற்கு முன், கிராமப் பகுதிகளில் உள்ள தனியார் ஆரம்பப் பள்ளிகள் யாவும், அரசாங்கக் கல்வி இலாகாவின் நேரடி மேற்பார்வையின்கீழ் இருந்துவந்தன. புதிய பள்ளிகளைத் தொடங்குவது, ஏற்கெனவே உள்ள பள்ளிகளில் புதிய வகுப்புகளைத் தொடங்குவது, ஏற்கெனவே உள்ள வகுப்புகளில் புதிய பிரிவுகளைத் தொடங்குவது, புதிய ஆசிரியர்களை நியமிப்பது, முதலியவற்றிற்கான ஒப்புதல் அளிக்கும் அதி

காரம் முழுவதும் அப்போதெல்லாம் கல்வி இலாகா அதிகாரிக ளிடமே இருந்து வந்தது. பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஏற் பட்ட பிறகோ, அந்த அதிகாரங்கள் யாவும் இப்போது உண்மையில் யாரிடம் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. முன்போலவே இப்போதும், மேற்படி ஒப்புதல்களைப் பெறுவதற் கான விண்ணப்பங்களை, தனியார் பள்ளி நிர்வாகிகள், கல்வித் துறை அதிகாரிகளுக்குத்தான் அனுப்புகிறார்கள். ஆனால் அவர் களிடமிருந்து அவை மீண்டும் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு அனுப்பப்படுகின்றன. முன்போல இப்போது கல்வித்துறை அதி காரிகள்மட்டும் ஒப்புதல் கொடுத்தால் அது போதுமானதாக இல்லை. பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும் ஒப்புதல் தர வேண்டியிருக் கிறது. கல்வி அதிகாரிகள் ஒப்புதல் தந்துவிட்டாலும் பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறி, பஞ்சாயத்து மன்றங்கள் உடனடியாக ஒப்புதல் தராமல் காலத்தைக் கடத்துவது வழக்கமாகி வருகிறது.

பல இடங்களில் பஞ்சாயத்து மன்றங்கள், தனியார் பள்ளிக் கூடங்களை வேண்டாத விருந்தாளிகளைப் போல நடத்துவதும், அவற்றிற்கு விரும்பத்தகாத தொல்லைகளைத் தருவதும், அவற்றின் நடைமுறைக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய பல்வேறு இடையூறு களை உண்டாக்குவதும், நித்திய நிகழ்ச்சிகளாக அமைந்து வருகின் றன.

சில பல பஞ்சாயத்து மன்றங்கள், தனியார் பள்ளிக்கூடங்கள் உள்ள இடங்களுக்குப் பக்கத்திலேயே தங்களுடைய பள்ளிக்கூடங் களை வேண்டுமென்றே போட்டி உணர்ச்சியோடு தொடங்கி அவற்றை அழித்து ஒழித்து விடவும் முயல்கின்றன.

சில பஞ்சாயத்து யூனியன்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், ஆணையாளர்கள் முதலியோர், தனியார் பள்ளிகளின் நடைமுறை நிர்வாகத்தில் தலையிடுவதும், இந்த ஆசிரியரை ஏன் நியமித்தாய்— அந்த ஆசிரியர் தேவையில்லை—இதோ இவரைத்தான் நியமித்தாக வேண்டும் என்றெல்லாம் கட்டளையிடுவதும் வழக்கமாகிவிட்டன.

தனியார் பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கத்தார் அளிக்கின்ற உதவித்தொகைகளை இந்தப் பஞ்சாயத்து மன்றங்கள் மூலமாகத் தருகிறபடியால், பல இடங்களில் இந்த மன்றங்கள், அந்தத் தொகை களை உரிய காலத்தில் தராமல் வேண்டுமென்றே தாமதித்துத் தருவ தும் வழக்கமாகி வருகிறது.

தனியார் ஆரம்பப் பள்ளிகளின் சிறப்பும் செம்மையும், அவற் றால் நாட்டுக்கு விளையும் பயனும் நன்மையும் குறையாமல் இருக்க வேண்டுமானால், அவற்றின் நடைமுறைக்கு ஏற்பட்டுள்ள இந்தப்

போராபத்து விலக்கப்பட்டாக வேண்டும். தனியார் தொடக்கப்பள்ளிகளுக்கு பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்கு இடையே எத்தகைய தொடர்பும் இல்லாத நிலை உருவாக்கப்படவேண்டும். இந்த மன்றங்கள் ஏற்படுவதற்கு முன்னர் எப்படி இந்தப் பள்ளிகள் யாவும் அரசாங்கக் கல்வி இலாகாவின் நேரடி அதிகாரத்தின்கீழ் இருந்தனவோ அதே போன்ற நிலை மீண்டும் உருவாக்கப்படவேண்டும். இதற்கு முன்னால் ஜில்லா போர்டுகளால் நடத்தப்பட்டு வந்த பள்ளிக்கூடங்கள் மட்டுமே பஞ்சாயத்து யூனியன்களின் ஆட்சிக்கு உட்பட்டன என்றும், தனியார் பள்ளிகளின்மீது அவற்றிற்கு எத்தகைய அதிகாரமும் இல்லை என்றும் அரசாங்கத்தால் திட்டவட்டமாக அறிவிக்கப்படவேண்டும். இப்படி யெல்லாம் செய்யப்பட்டால்தான் தனியார் பள்ளிகளின் சிறப்பும் எழிலும் சீர்குலையாமல் விளங்கும்; அவற்றால் அளிக்கப்படும் கல்வியின் உயர்ந்த தரமும் குறையாமல் ஒளி வீசும்.

தனியார் பள்ளிகளுக்குத் தேவையான அங்கீகாரங்களைக் கல்வி அதிகாரிகள் மட்டும் தந்தால் போதாது, பஞ்சாயத்து மன்றங்களும் தந்தாகவேண்டும் என்கிற தற்போதைய குழப்ப நிலையை — அல்ல அல்ல — குழப்பம் கலந்த ஆபத்தான நிலையை எக்காரணத்தை முன்னிட்டும் அரசாங்கத்தார் தொடர்ந்து நீடிக்கவிடக்கூடாது.

பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான அங்கீகாரங்களைத் தருகிற இறுதி அதிகாரம் பஞ்சாயத்து யூனியன் மன்றங்களுக்குத்தான் என்றால் அரசாங்கக் கல்வி இலாகாவின்மீது அரசாங்கத்திற்கே நம்பிக்கை இல்லை என்றல்லவா ஏற்பட்டுவிடும்? அப்படியானால் கல்வி இலாகா என்கிற ஓர் துறை எதற்காக இருக்கவேண்டும் என்கிற கேள்வியும் அல்லவா பிறந்துவிடும்?

சாதிச் சண்டை, கட்சிச் சண்டை, குடும்பச் சண்டை முதலிய பல்வேறு பூசல்களும் பிணக்குகளும் தலைவிரித்தாடும் போர்க்களங்களாகவே பல்வேறு பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் அமைந்திருக்கின்றன. இத்தகைய மன்றங்களிடமும், இவற்றின் தலைவர்கள் ஆணையாளர்கள் போன்றவர்களிடமும் தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தில் தலையிடுகிற உரிமை தொடர்ந்து இருக்குமானால், இந்தப் பள்ளிக்கூடங்களும், பூசல்களும் பிணக்குகளும் சீறிப் பாயும் மைதானங்களாக அல்லவா மாறிவிடும்? மாறவிடலாமா அவற்றை அதுபோல? மாறவிடுவது நல்லதா நம் நாட்டின் எதிர்காலத்திற்கு?

அன்புகூர்ந்து இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும் ஆட்சியாளர்கள்; எண்ணிப் பார்க்கும்படிச் செய்யவேண்டும் தனியார் பள்ளி நிர்வாகிகள்.

இப்போது நடைபெறுவது ஜனநாயக சகாப்தம். இந்த சகாப்தத்தில், ஒரு கோரிக்கை, நியாயமானது என்பதால் மட்டும் வெற்றி பெற்றுவிட முடியாது. அந்த நியாயத்தின் பின்னால் போதுமான

பலமும் அந்தப் பலத்தைத் திரட்டுவதற்குத் தேவையான கிளர்ச்சியும் இருந்தால்தான் அந்தக் கோரிக்கை வெற்றி பெறமுடியும்.

அழுத பிள்ளைதான் பால் குடிக்க முடியும் — இது, குடும்ப நிலைமையைப் படம் பிடித்துக் காட்டும் பழைய மொழி.

ஜனநாயக ஆட்சிமுறையில், கிளர்ச்சி செய்பவர்கள்தான் வெற்றி பெறுவார்கள் — இது, நாட்டின் நிலைமையை விளக்கிக் காட்டும் புதிய மொழி.

இந்தப் புதிய மொழியின் பொருளை முழுவதும் உணர்ந்து கொண்டு, தனியார் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள், தங்களுக்கு ஏற்பட்டுள்ள புதிய ஆபத்தை அரசாங்கத்திற்கு விளக்கிக் கூறவும், தேவையான பரிகாரங்களை மேற்கொள்ளும்படி வற்புறுத்திக் கேட்கவும் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

ஆபத்து வந்து விட்டதே — என் செய்வோம் யாம் என்று கைகளைப் பிசைந்து கொண்டு வீட்டிற்குள் முடங்கிக் கிடப்பதால் ஆபத்து அகன்றுவிடாது.

ஆகுமா இந்தப் போக்கு-நியாயமா—என்று அண்டை வீட்டுக் காரருடன் அமைதியாக உட்கார்ந்து கொண்டு ஓய்வு நேரத்தில் தர்மநியாயம் பேசிக் கொண்டிருப்பதாலும்பிரச்சினை தீர்ந்துவிடாது.

ஆபத்தை அழித்து ஒழிப்பதற்கான பணியில் மும்முரமாக ஈடுபட்டாக வேண்டும். முழுமூச்சுடன் தொண்டாற்ற வேண்டும். கூட்டங்கள் கூட்டிப் பேசுவது, தீர்மானங்கள் நிறைவேற்றி அரசினருக்கு அனுப்புவது, தூதுக்குழுக்களாகச் சென்று அமைச்சர்களைப் பேட்டி கண்டு நிலைமையை விளக்குவது, உண்மையை விளக்கிக் காட்டி அறிக்கைகள் தயாரித்து நூற்றுக்கணக்கான பள்ளி நிர்வாகிகளின் கையொப்பங்களைப் பெற்று அரசினருக்கு அனுப்புவது, ஆங்காங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களைப் பேட்டி கண்டு நிலைமைகளை விளக்கிக் கூறி இவற்றைச் சட்டமன்றத்தில் எடுத்துப் பேசுமாறு கேட்டுக்கொள்வது முதலிய பல்வேறு கிளர்ச்சிப் பணிகளையும் ஆர்வத்துடன் நடத்தவேண்டும்.

வந்ததே விபத்து என்று வாளா கிடப்பதால் பயனில்லை. விழித்தெழுந்து வீறு கொண்ட மனிதர்களாக விறுவிறுப்புடன் பணியாற்றினால் வெற்றி உறுதி.

ஏற்பட்டுள்ள ஆபத்தின் முழு உருவத்தையும் தன்மையையும் நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் எடுத்துக்காட்டவும், ஆபத்தை விரட்டுவதற்கான வழிமுறைகளை வகுக்கவும் உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகளின் மாநில மாநாடு சென்னைமா நகரில் மார்ச் மாதத்தில் கூட்ட முடிவு செய்து, அதற்கான ஏற்பாடுகளில் அச்சங்க நிர்வாகிகள் பேரார்வத்துடன் ஈடுபட்டுள்ளார்கள்.

தமிழகம் எங்கணும் உள்ள தனியார் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகளே! உறங்கியது போதும்! விழித்தெழுங்கள்! ஓடோடி வாருங்கள் நம் மாநில மாநாட்டுக்கு! ஒன்று கூடுவோம்-கலந்து பேசுவோம்—திட்டம் தீட்டுவோம்—இணைந்து பணி ஆற்றுவோம் நாம் மட்டும் ஒன்று சேர்ந்து உற்சாகத்தோடு பணியாற்றினால் நம்மைச் சுற்றி வளைத்துள்ள ஆபத்து தலை தெறிக்க ஓடி மறைவது உறுதி, உறுதி,

அன்பும் ஆர்வமும் படைத்த தனியார் பள்ளி நிர்வாகிகளே! நினைவிருக்கட்டும் நினைவிருக்கட்டும்! நம் மாநில மாநாடு—சென்னை மாநகரில் — மார்ச்சு மாதத்தில்! வந்துவிட்ட ஆபத்தை விரட்டியடிக்கத் திரள் திரளாக வாருங்கள்—தவறாமல் வாருங்கள்—எல்லோரும் வாருங்கள்.

சென்னை மாநில உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள், ஆசிரிய நிர்வாகிகள் மாநாடு.

நமது மாநிலத்தில் 1957–58 கணக்குப்படி சுமார் 21,000 ஆரம்பப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. அவற்றில் சுமார் 5,500 பாடசாலைகள் தனிப்பட்ட நிர்வாகிகளாலும், சுமார் 1,500 பாடசாலைகள் ஆசிரிய நிர்வாகிகளாலும் நடத்தப்பட்டு வருகின்றன. அதாவது மூன்றில் ஒரு பங்கு பாடசாலை தனியார் நிர்வாகத்தில் (Private Management) நடத்தப்பட்டு வருகின்றன. சுமார் 3 கோடி ரூபாய் அரசாங்கம் உதவி பெறும் பாடசாலைகளுக்கு மானியம் கொடுத்து வருகிறது.

நாம் சுதந்தரம் அடைவதற்கு முன்பாக ஆங்கில ஆட்சியில் நமது மாநிலத்தில் பாதிக்குமேல் உதவிபெறும் பாடசாலைகளே. மிகத்திறமையாகவும் சுருங்கிய செலவிலும் நடைபெற்று வந்தன. கொடுக்கவசதியுள்ள பெற்றோரிடம் சம்பளம் வசூலிக்க அனுமதியும், கட்டிட வாடகை போன்ற பல மான்யங்களைத் தாராளமாக அரசாங்கம் நிர்வாகிகளுக்குக் கொடுத்து, ஆரம்பக்கல்வியை பரப்ப ஊக்குவித்தனர். அதன் விளைவாகத் தாராளமான வருவாயைக் கொண்டு சில நிர்வாகிகள் தங்கள் பள்ளிகளுக்குச் சொந்தமான கட்டிடங்களைக் கட்டுவித்தனர். ஆனால் இன்று சுதந்தரம் வந்த பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நிலை தலைகீழாக அரசாங்கத்தின் கொள்கை மாறிவிட்டது. எயிடெட் பள்ளிகளும் குறைந்து வருகின்றன.

புதிய ஆபத்து

சமீபத்தில் ஜில்லா போர்டுகளால் நடத்தப்பட்ட ஆரம்பப்பாட சாலைகள் பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் நிர்வாகத்திற்கு மாற்றப் பட்டு இருக்கின்றன. குறிப்பிட்ட பஞ்சாயத்து வட்டாரத்தில் ஆரம் பக்கல்வி பட்டி தொட்டிகளில் எல்லாம் பரப்புவதற்காக முழுப் பொறுப்பையும் பஞ்சாயத்து கமிஷனர்களுக்குக் கொடுக்கப்பட்டு எயிடெட்பள்ளிகளுக்கு மாதாந்திர மான்யம் கொடுக்கும் பொறுப் பையும் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டது. இதன் விளைவு பாட சாலை இல்லாத கிராமங்களில் பாடசாலைகளை வைப்பதை விட்டு, ஏற்கனவே நடந்து வருகின்ற எயிடெட் பள்ளிகளை மூடி விடச் செய்வது, அல்லது நிர்வாகிகளைத் தொந்தரவு செய்து ஒப்படைக்கச் செய்வது என்ற திருப்பணியில் சில பஞ்சாயத்து நிர்வாகிகள் மிகத் தீவிரமாக இறங்கியிருப்பதாகப் பலப்புகார்கள் அரசாங்கத்திற்கும் கல்வி இலாகாவிற்கும் வந்து கொண்டிருக்கின்றன. கனம் முதல மைச்சர் திரு. காமராஜர் அவர்களும் பஞ்சாயத்து யூனியன் மகா நாட்டில் எயிடெட் பள்ளிகளுக்கு எத்தகைய தொந்தரவும் கொடுக் கக் கூடாது என்று வற்புறுத்தியும், சில பஞ்சாயத்துயூனியன் நிர்வா கிகள் எயிடெட்பாடசாலைகளை மூடியும் நிர்வாகத்தை மாற்றியும் வருவதாகத் தெரிகிறது.

இந்தச் சூழ்நிலையில் தற்போதுள்ள பஞ்சாயத்துச் சட்டப்படி கல்வி அதிகாரிகள் உடனடியாக எயிடெட் பள்ளி நிர்வாகிகளுக்கு உதவிபுரிய வழியில்லாமல் இருக்கிறது. ஆதலால் உடனடியாக பஞ்சாயத்து சட்டம் திருத்தப்பட்டு, பழையபடி எயிடெட்பள்ளி நிர்வாகம் கல்வி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு, ஜில்லா கல்வி அதிகாரிகளே மாதாந்தர கிராண்டு (Monthly Grant) அங்கீ காரம் (Recognition) முதலியவைகளைக் கொடுத்து எயிடெட்பள்ளி முழு நிர்வாகத்தையும் கல்வி இலாகாவிற்கு மாற்றப்பட வேண்டும். அப்படி உடனடியாக செய்யப்படவில்லையானால் இன்னும் பத்தாண்டு களுக்குள் (Private Schools) தனியார் நிர்வாகம் நாட்டில் மறைந்தே போய் விடும். இதன் விளைவு நாட்டில் நல்லமுறையில் ஆரம்பக்கல்வி பரவ பல சிக்கல்கள் ஏற்பட்டுவிடும். இதை அரசாங் கத்தின் பார்வைக்கும் பொதுமக்கள் கவனத்திற்கும் கொண்டுவர வேண்டியது, தொன்று தொட்டு இந்நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்துவரும் நிர்வாகிகளாகிய நமது கடமை ஆகும். இதற்கா கவே மார்ச்சு மாதத்தில் சென்னையில் மாநில மா நாட்டை கனம் கல்விமந்திரி அவர்களை வரவழைத்து நடத்த சென்னை மாவட்ட நிர்வாகிகள் சங்கம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது.

ஆதலால் ஜில்லாவாரியாக அமைந்துள்ள நிர்வாகி சங்கங்கள் தங்கள் குறைகளைத் தீர்மானமாகப் போட்டுக் கீழ்க்கண்ட விலாசத்

திற்கு அனுப்புவதோடு, குறைந்தது ஜில்லாவிற்குப் பத்து பிரதிநிதி களாவது தேர்ந்தெடுத்து அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பி. வீரராகவன்
தலைவர்
A. R. சேஷாசலம்
பொதுக் காரியதரிசி.

சென்னை மாநில துவக்கப்பள்ளி நிர்வாகிகள் சங்கம்.
94-95 புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1



சென்னை மாவட்ட உதவிபெறும் ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் ஆசிரிய நிர்வாகிகள் சங்கத்தின் சார்பில் 12-2-63, அன்று, கனம் கல்வி மந்திரி அவர்களையும், கல்வியிலாகா டிப்டிடைரக்டர், அவர்களையும், கீழ்க்கண்ட அங்கத்தினர்கள் அடங்கிய தூதுகோஷ்டி, சந்தித்து எய்டெட் பள்ளிகளுக்கு ஏற்பட்டுள்ள, குறைகளை எடுத்துக் கூறினர். (1) திரு. கந்தசாமி நாடார், (2) திரு. A. R. சேஷாசலம் (மாநில சங்கத்தின் பொதுக் காரியதரிசி) (3) திரு. K. கணேசன். (4) திரு. M. R. சோமசுந்தரம் (5) திரு. V. கணேச மூர்த்தி.

கலை கைத்தொழில் ஆசிரியர் சங்கம்
சென்னை—1.

சென்னை கலை கைத்தொழில் ஆசிரியர் சங்கக் காரியதரிசி எழுதிக்கொள்ளும் செய்தி யாதெனில்,

ஐயா !

தமிழ் நாட்டிலுள்ள உயர்தர ஆரம்பப் பாடசாலைகளில் முழு நேரம் பணிபுரியும் பல்லாயிரம் கைத்தொழில் ஆசிரியர்களை வருகிற பள்ளி வருட 1963–64—ல் இருந்து அரை நாள் மட்டும் வேலை செய்யுமாறும், அவர்கள் தற்போது வாங்கும் மாதச் சம்பளம் ரூ. 85 கிடைக்காது ரூ. 30 மட்டும் பெறுவார்கள் என்றும், சென்ற மாதத்தில் கல்வித்துறை இயக்குநர் எல்லாப்பள்ளித் தலைவர்களுக்கும் உத்தரவு அனுப்பியுள்ளார்கள். அவ்வுத்தரவில் உயர்தர ஆரம்ப பாடசாலைகளின் புதிய பாட திட்டப்படி வருகிற பள்ளி வருடத்திலிருந்து புதிய எட்டாம் வகுப்பு இல்லாத காரணத்தாலும், கைத்தொழில் ஆசிரியர்கட்கு வகுப்பு நேரங்கள் மிகவும் குறைவாக இருக்கிறபடியாலும் அவர்களை அரைநாள் வேலை செய்தால் போதுமென உறுதியான உத்திரவு அனுப்பி உள்ளார்கள்.

இதனால் அக்கைத்தொழில் ஆசிரியர்கள் பஞ்சப்படியும், பிராவிடெண்டு பண்டும், லீவு சலுகைகளும் கிடைக்காமல் தவிப்பார்கள். ஆகவே இக் கைத்தொழில் ஆசிரியர் வேலையை நம்பி அதிக ஆண்டு பணிபுரியும் கைத்தொழில் ஆசிரியர்கட்கு இப் புதிய உத்தரவை உடனே நீக்கும்படியும், நான்காம், ஐந்தாம் வகுப்புகளில் கைத்தொழில் பாடம் போதிக்கும்படியாகவும், இனிப் புதிதாக வரும் கைத்தொழில் ஆசிரியர்கட்கும்கூட இவ்வுத்தரவு பாதிக்கா வண்ணம் புதியதொரு உத்தரவு அளிக்கும்படியும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறோம். கடந்த 12–1–62—ல் நடந்த சென்னை கலை கைத்தொழில் ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

சென்னை மாநில கல்வி அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்களையும் கல்வித்துறை இயக்குநர் அவர்களையும் நேரில் கண்டு மகஜர் கொடுப்பதற்கென எழுவர் கொண்ட ஒரு தூது குழுவும் நியமிக்கப்பட்டது. சங்கத் தலைவர் திரு. எம். பி. ராசகோபால் தலைமை வகித்தார். திரு. K. சுவாமிநாதன், B. A., L. T, பெப்ரீஸியஸ் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள், தமிழ் நாட்டிலுள்ள உயர்தர ஆரம்பப்பள்ளி கைத்தொழில் ஆசிரியர்களை வரவேற்று சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

ஜான் A. பொன்னய்யா
செயலாளர்.
22-1-63

C. A. மரியண்ணு. J. P.

வாழ்க்கை வரலாறு

1961–62–ல் விருதுபெறும் ஆசிரியர்களுள் ஒருவராகத் தமிழ்நாடு அரசாங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. C. A மரியண்ணு J. P. அவர்கள் அடக்கத்தைப் பொருளாகவும் ஆர்வத்தை உயிராகவும் கொண்டவர்; சிறந்த ஆசிரியர் ; ஆசிரியர் நலன்கருதி உழைக்கும் உத்தமர்; சிறந்த கர்மவீரர். அரசாங்கம் அன்னாருக்கு விருது அளித்தது பாராட்டுக்குரியது.

மரியண்ணு அவர்கள் தொண்டை நாட்டைச் சார்ந்த செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கீழச்சேரியில் 1902-ல் பிறந்தார். தந்தையார் காரசால அந்தையநாயுடு. தாயார் அருளம்மாள். மரியண்ணுவிற்கு சகோதரர் ஒருவர் சகோதரிகள் இருவர் உள்ளனர். சீரும் சிறப்புமாக வளர்ந்த இவர் மயிலாப்பூரில் உள்ள சாந்தோம் உயர்நிலைப்பள்ளியிலும் திருச்சியிலுள்ள செயிண்ட் ஜோசப் கல்லூரியிலும் கல்விகற்று, சைதாப்பேட்டை ஆசிரியர்க் கல்லூரியில் 1928–30–ல் செகண்டிரி கிரேட் ஆசிரியர்ப் பயிற்சியை முடித்தார்.

வேலூரில் உள்ள ரோமன்கத்தோலிக் சிறுவர் உயர் தொடக்கப் பள்ளியில் 1930–ல் தலைமை ஆசிரியராகத் தம் வாழ்வைத் தொடங்கினர்; சுமார் ஐந்து ஆண்டுகள் அப்பள்ளியில் பணியாற்றினார்; பின்னர் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த ஸ்ரீ பெருமந்தூர், பூவிருந்த வல்லி, பொன்னேரி ஆகிய இடங்களில் உள்ள மாவட்டக்கழக உயர் தொடக்கப் பள்ளிகளில் பத்து ஆண்டுகாலம் பணியாற்றி இருக்கின்றார்; பிறகு, செயின்ட் பீட்டர்ஸ் உயர்நிலைப் பள்ளியிலும் எழுமூர் உயர்நிலைப்பள்ளியிலும் தொண்டாற்றி, 1951-ல் இருந்து சென்னை விருதுநகர் நாடார் உயர்தர ஆரம்பப் பள்ளிக்குத் தலைமை ஆசிரியராக இருந்து வருகின்றார். அப்பள்ளியின் வளர்ச்சிக்கு அடிகோலினர்; 300 மாணவர்களுக்கு மதிய உணவு அளித்து வருகின்றார்.

வேலூரில் ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் துணைத்தலைவராகவும் இருந்து தொண்டாற்றியுள்ளார்; வண்ணையம்பதி விஜிலென்ஸ் கமிட்டி மெம்பராக இருந்தார்; 1961–ல் அன்னாரைத் தமிழ்நாடு அரசாங்கம் கௌரவ மாஜிஸ்டிரேட்டாக நியமித்துக் கௌரவித்து உள்ளது. ஆசிரியர் நலனுக்காகப் பொன்னேரியில் கூட்டுறவுச் சங்கத்தை நடத்தினர். இப்போது தாம் பணியாற்றும் பள்ளியிலும் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி, தலைவராக இருந்து வருகின்றார்.

மாணவர் மனம் ஏற்குமாறு கல்வி போதிக்கும் சிறந்த ஆசான். இவரிடம் கல்வி கற்ற பலர் தலைமை ஆசிரியர்களாகவும் பஞ்சாயத்து ஒன்றியங்களின் தலைவர்களாகவும், அதிகாரிகளாகவும் இருக்கின்றனர். தமது பண்பின் பெருமையால் பெரியோர்கள் தொடர்பு வாய்க்கப் பெற்றவர்; ஒழுக்கசீலர்; விளம்பரம் விரும்பாமல் கல்விக்கு அருந்தொண்டாற்றுபவர்; எல்லோர்க்கும் நண்பர்; தனக்கெனப் பொருள்சேர்க்காத நல்லவர்களுக்குரிய பலவீனம் இவரிடம் உண்டு. மரியண்ணு அவர்களிடம் காணப்படும் இரக்கம், எளிமை, இனிமை, பொறுமை முதலியவை பிறர்க்கோர் எடுத்துக் காட்டாகும்.

மரியண்ணு அவர்களுக்கு 1963 ஏப்ரலில் மணிவிழா நடத்த ஏற்பாடு நடந்து வருகின்றது. அவ்விழாவில் அன்னுருக்குப் பொன்னுடை போர்த்தி, மலரொன்று வெளியிட்டு, பணமுடிப்பு வழங்க திரு. A. T. பாலகிருஷ்ணன் (உரிமையாளர் தங்கம் தியேட்டர், சென்னை-21) அவர்கள் தலைமையில் திரு P. A. K. பழனிசாமி (நிர்வாகி சென்னைவிருதுநகர் நாடார் உயர்தர ஆரம்பப் பள்ளி சென்னை-21) அவர்களைச் செயலாளராகக் கொண்ட மணி விழாக்குழுவில் திரு. P வீரராகவன் (ஆசிரியர் ஆரம்பக்கல்வி) அவர்களும திரு. M. மாயாண்டிநாடார்M. L. A அவர்களும் திரு. K. இராமதாஸ் M. L .C. அவர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

எல்லா வகையிலும் சிறந்த ஆசிரியரான இவர் புகழுக்குரியவர்; பாராட்டுக்குரியவர்; போற்றுதலுக்குரியவர்.

வாழ்க கல்விப்பணி ! வாழ்க பல்லாண்டு !

வாழ்க ஆசிரியர் நிர்வாகத் தொடர்பு !

அறிவுக் கதிர்

சிந்தனையில் ஆழமாயிருப்பதும், சொற்களில் தெளிவாயிருப்பதும், செயலில் விழிப்போடிருப்பதும், மிகவும் நல்லவை.

மார்க்க அலிரேயர்

ஒருவனுக்கு அமுதமாக இருப்பது மற்றொருவனுக்கு நஞ்சாக இருக்கலாம். ஆகவே அனைவருக்கும் அனைத்தும் பொருந்தும் என்று எண்ணிவிட வேண்டா.

— லுக்ரீசியஸ்

ஒரு மனிதனுக்கு நீ செய்த உதவிகளை அவனிடம் அடிக்கடி நினைப்பூட்டிக்கொண்டிருப்பது, அவனைப் பழிப்பதுபோல ஆகும். அதனைச் செய்யாதே.

—டெமாஸ்தனிஸ்

மனிதனின் திறமை எந்த வயதில் வெளிப்படுகிறது?

சாதாரணமாக 30 வயதில்தான்! நிறையப் பணம் சம்பாதிப்பது 50 வயதுக்கு மேற்பட்டுதான்

(பிரிட்ஸ் வாகல்)

மனிதனின் திறமை சாதாரணமாக எந்த வயதில் வெளிப்படுகிறது? ஏராளமான பேர்களைப் பற்றித் தகவல் சேகரித்துத் தத்துவ நிபுணர்கள் சில சுவாரஸ்யமான விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்த முடிவுக்குச் சில விதிவிலக்குகளும் இல்லாது போகவில்லை. மனிதன் 20 முதல் 45 வயது வரை தன் திறமையை நன்கு வெளிப்படுத்த முடிகிறது என்பது பொதுவாகக் கண்டுபிடிக்கப்பட்டது. மற்றும் ஒவ்வொரு துறையில் பிரபலமடைய ஒவ்வொரு வயதுக் காலம் ஏற்றதாக இருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மனிதன் எந்த வயதில் தன் திறமையை நன்கு வெளிப்படுத்த முடிகிறது என்ற விஷயத்தைப் பற்றிப் பலபேர்களை விசாரித்துப் பல புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றை ஆய்ந்து சில ஸ்வாரஸ்யமான உண்மைகளைத் தத்துவ நிபுணர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

பத்து வயது முதல் பதினைந்து வயது வரைதான் பொதுவாக நன்கு படித்துத் திறமை வெளிப்படும் வயது என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் தத்துவ நிபுணர்கள் செய்து உள்ள முடிவின்படி 20 வயது முதல் 45 வயது வரைதான் திறமை வெளிப்படும் வயது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மூனிச் கல்வி நிபுணரும் குழந்தைக் கல்வி நிபுணருமான திருமதி ஸில்மான் தன் கருத்தை வெளியிடுகையில் கற்பதற்கான ஆரம்ப சூழ்நிலையும் கவனிக்கப்பட வேண்டும்; வயதை மட்டும் கவனித்தால் போதாது என்று கூறியிருக்கிறார். இருபது வயது உள்ள ஒருவருக்கு எழுதப்படிக்கத் தெரியும்; கணக்கு பற்றிய பூர்வங்க விஷய ஞானம் இருக்கும்; விஷயங்களைக் கற்க வேண்டும் என்ற ஆவலும் இருக்கும். ஆனால் குழந்தைகளில் சில பள்ளிகளுக்குப் போவதையே ஒரு நிர்ப்பந்தமாகக் கருதும். அப்படியிருந்தும் குழந்தை ஒரே வருடத்தில் எழுதப்படிக்கத் தெரிந்துகொண்டு விடுகிறது. இது பெரிய அதிசயம்தான். தற்குறியாக உள்ள வயது வந்தவர்களுக்கு இவ்வளவு சுலபமாக எழுதப்படிக்கத் தெரிவதில்லை. அதிக காலம் பிடிக்கிறது.

தத்துவ நிபுணர்கள் தங்கள் கண்டுபிடிப்பில் ஒவ்வொரு துறையிலும் மனிதன் பிரபலமாக

விளங்க ஒவ்வொரு வயது காலமே ஏற்றதாக இருக்கிறது என்பதை நிர்ணயித்துள்ளனர்.

கவிகள் கவிதைகளைப் புனைவதில் திறமை பெற்று விளங்குவது 26 முதல் 30 வயது வரை; நாவலாசிரியர்களின் திறமை வெளிப்படுவது 40 முதல் 44 வயது வரை. ஓவியர்கள், கவன கர்த்தாக்கள், கணக்கு நிபுணர்கள், கண்டுபிடிப்பாளர்கள் இவர்கள் சிறந்து விளங்குவது 33 வயதிலிருந்து 44 வயதுவரை. வைத்திய நிபுணர்கள், மனோதத்துவ நிபுணர்கள் 36 வயது முதல் 50 வயது வரை சிறந்து விளங்குகிறார்கள்.

பொதுவாக நிறையப் பணம் சம்பாதிக்கப்படுவது 50 வயது முதல் 56 வயது வரைதான். வயது ஆவதுடன் மட்டுமின்றி விஷயஞானமு, வாழ்க்கை அனுபவம் இவைகளும் திறமையாகச் செயல்பட மிகவும் உதவுகின்றன. இது அன்றாடம் புதுப்புது விஷயங்களைப் படித்துக் கற்று வருபவர்கள் விஷயத்திலேயே உண்மையாகும். படிப்பு முடிந்தபின் இயந்திரம் போல வாழ்க்கை நடத்துபவர்கள் விஷயத்தில் இது சரியாக இராது.

தத்துவ நிபுணர்கள் நிர்ணயித்துள்ள இம்முடிவுகள் பொதுவானவையே. இந்த விதிக்கு விலக்குகளும் உண்டு. மகா மேதைகளாக விளங்குபவர்கள் இந்த விதிக்கு அப்பாற்பட்டவர்கள். மோஸர்ட் என்ற கவிஞர் தன் சிறு பிராயத்திலேயே ஒரு மேதையாக விளங்கினார். அவர் இறக்கும் போது வயது 35 தான். ஆனால் கெர்டீ என்ற கவிஞர் 40 வயது முதல் 60 வயது காலம் வரை சிறந்த கவிதைகளை எழுதினார். ரிம்பாட் என்பவர் 19 வயது வரை பிரமாதமாக எழுதினார். கதேயும், பெர்னார்ட் ஷாவும் மிகவும் முதிர்ந்த வயது வந்தும் சிறந்த மேதைகளாக விளங்கினார்கள்.

இன்று அரசியல் உலகில் ஒருபுறம் 40 வயது முதல் 45 வயது வரையுள்ள கென்னடி, நாஸர், வில்லி பிராண்ட் ஆகியோரும், மற்றொருபுறம் 65 வயதுக்கும் 85 வயதுக்குமிடையே உள்ள குருஷ்சேவ், அடினார் போன்றவர்களும் தங்கள் செல்வாக்கைப் பெரும் அளவுக்கு உபயோகப்படுத்தும் நிலைமையிலிருக்கிறார்கள். இவர்கள் விஷயமாகத் தத்துவ நிபுணர்கள் ஏற்படுத்திய விதிகள் எதுவும் சரிப்பட்டு வராது. (யூ. பி. எஸ்.)

—ஜெர்மன் செய்திக் கட்டுரைகள்

மனக் காற்றடி

—: தாமரைக் கண்ணன் :—

புத்தாண்டுப் பிறப்புதினம். நண்பன் உமாபதி என்னைத் தன் வீட்டிற்கு வரும்படித் தொந்தரவு செய்ததற்கிணங்க, நானும் அவன் வீட்டிற்குச் சென்றேன்.

நாங்கள் அவன் வீட்டுக்குள் நுழைந்து கூடத்தை அடைந்த போது, அவன் தங்கைகள் காந்திமதியும், சங்கரியும் காலைச் சிற்றுண்டி உண்டவண்ணம் பேசிக் கொண்டிருந்தது நன்றாகக் கேட்டது நாங்கள் அங்கேயே நாற்காலிகளில் அமர்ந்தோம்.

'விக்......விக்'—காந்திமதிக்குச் சிற்றுண்டி விக்கல் ஏற்றிற்று!

"அதிர்ஷ்டக்காரி நீ, காந்திமதி! உன் அண்ணன் நினைக்கிறான். உம்... இந்த நல்ல நாளில்கூட அவன் வீட்டில் இல்லை; எங்கேயோ பள்ளிக்கூடத்தில் இருக்கிறான்" என்று பேசிக்கொண்டே சிற்றுண்டி பரிமாறிவிட்டு உள்ளே சென்றார்கள், அவர்கள் தாயார்.

"ஆமாம்! உன்னையும் என்னையும் நினைக்க அவருக்கு நேரமேது'ம்மா? காந்திதான் அவருக்கு செல்லத் தங்கை, நினைக்கிறார்போலிருக்கிறது. இல்லாவிட்டால் எனக்கும் விக்குமல்லவா?" சங்கரி கூறி வருத்தப்பட்டாள்.

நாங்கள் இங்கே — கூடத்தில் — இருப்பது அவர்களுக்குத் தெரியாது. உமாபதி ஒரு விளையாட்டுக்காரன்! என்னைப் பேசாமல் உட்கார்ந்திருக்கும்படி சைகை செய்தான்.

'விக்...விக்'—காந்திக்கு மறுபடியும் விக்கியது. "அண்ணன் என்னை நினைக்காமற்போனாலும் போகிறது... நான் உன் தலையைத் தட்டித் தொலைக்கிறேன்" என்று சங்கரி சொல்லிக் கொண்டே 'தட் தட்'டென்று காந்தியின் தலையில் தட்டினாள்.

"அம்மா... அம்மா" என்று கத்தினாள், காந்தி.

"இதற்காகவா அம்மாவைக் கூப்பிடுவாங்க? அண்ணன் என்னை நினைக்கவே வேண்டாம். நான் வேண்டுமென்றே விக்கறேன். நீ என் தலையில் தட்டு" என்றாள், சங்கரி கண்களை மூடிக் கொண்டு.

அவள் மனத்தில்தான் எத்தனை அமுத எண்ணங்கள், தன் அண்ணனைப்பற்றி! ஒரு வேளை, அவளுக்கு மணம் நடந்து புக்ககம்

போனாலும் இப்படியே இருப்பாளோ...? அல்லது ஒரு சில தங்கைகளைப்போலக் கணவனை உயர்வு என்று அண்ணனை மறந்து விடுவாளோ? யார் கண்டார்கள்...?

உமாபதி என்னைப் பார்த்துப் புன்முறுவலித்துக் கொண்டே உள்ளே சென்று சங்கரியின் தலையில் குட்டினான். காந்தி தன அண்ணனைத் திடீரெனக் கண்டதால் ஏற்பட்ட மகிழ்வுப் பிரளயத்தை அடக்கிக்கொண்டு எழுந்து நின்றாள்.

"அக்கா! உன்னை என் தலையில் தட்டச் சொன்னேனா? குட்டச்சொன்னேனா?" என்று கண் விழித்துத் திரும்பினாள், சங்கரி! அவள் உமாபதியைப் பார்த்ததும் "அம்மா! அம்மா!! அண்ணன் வந்திருக்கு, அம்மா" என்று கூவிக்கொண்டே உள்ளே ஓடினாள்.

நான் முதன் முதலாக அவன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். இதெல்லாம் எனக்கு வேடிக்கையாக இருந்தது.

"வா சந்திரா, உள்ளே" என்று என்னை உள்ளே அழைத்தான். அவன் தாயார், "என்னடா கடிதம்கூட எழுதவில்லை, வருகிறேன் என்று" என்று அவனைக் கேட்டுக்கொண்டே வந்தவர் என்னைப் பார்த்தார். "என் உயிர் நண்பன், அம்மா! பெயர் சந்திரன்" என்று அறிமுகப்படுத்தினான், உமாபதி! "உட்காருப்பா" என்று உபசரித்தார், அவனுடைய அம்மா.

சிரிப்பு விளையாட்டுடன் சிற்றுண்டி முடிந்தது. நானும் உமாபதியும் மாடிக்குப் போனோம். மேசைமீது கிடந்த காந்தி அண்ணல் எழுதிய 'மாணவருக்கு' என்ற புத்தகத்தை எடுத்துப் பிரித்தேன். முதல் பக்கத்தில், "காந்திமதி, ஐந்தாம் படிவம்" என்று எழுதப்பட்டிருந்தது.

என் கவனம் கீழே நடந்த பேச்சால் கவரப்பட்டது.

"யாரம்மா, அவர்?" என்று கேட்டாள், சங்கரி. "அவனும் ஒரு அண்ணன் தான்!"-அவள் தாயார் இப்படிப் பதில் கூறினார்கள்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சங்கரி வந்தாள். "அண்ணா! அம்மா வரச்சொன்னார்கள்" என்று உமாபதியிடம் சொல்லவே, அவனும் "இதோ வந்து விடுகிறேன், சந்திரா" என்று சொல்லிச் சென்றான்.

சங்கரியை அருகில் அழைத்து "நீ எந்த வகுப்பு படிக்கிறாய்?" என்று கேட்டேன். "ஏழாவது வகுப்பு" என்றாள். "வகுப்பிலே நான்தான் முதல் மார்க்கு. எங்கள் தமிழாசிரியர் நல்லவர். பள்ளிகம் வீட்டிற்குப் பக்கத்தில்தான் இருக்கிறது..." என்று படபடப்

டுடன் சரமாரியாகப் பேசிய அவள், "நீங்களும் எங்கள் அண்ணனைப்போல ஆசிரியர் வேலைக்கா படிக்கிறீர்கள்" என்று ஒரு கேள்வியைப் போட்டாள்.

"ஆமாம், சங்கரி! அடுத்த வருடம் நான் உனக்கே ஆசிரியராக வருவேன்!" — அவள் தலை மயிரை வருடிக்கொண்டே கூறினேன்.

"ரொம்ப நல்லது. எங்கள் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு நீங்களும் இங்கேயே இருக்கலாம்" — அவள் இன்பம் நிறைந்த இதயத்திலிருந்து வழிந்தன, இச்சொற்கள்!

மாலை... மஞ்சள் வெயில்! வீட்டைச் சுற்றியிருந்த சந்தனத் தருக்களிலிருந்தும், வேப்பமரத்தின் தளிர் பூக்களிலிருந்தும் கொண்டு வந்த மென்மணத்தை முல்லை மொட்டின் வடிவழகில் இழைத்துத் தந்தது தென்றல். மாடியில் இயற்கையழகுடன் இழைந்து கொண்டிருந்தேன். கீழே பூந்தோட்டத்தில் மலர்களின் அழகு கண்கொள்ளாக் காட்சி!

காந்திமதி வீட்டினுள் இருந்து ஓடிவந்து ஒளிந்தாள், ஒரு மல்லிகைப் புதரின் மறைவில்! சங்கரி சிரித்துக்கொண்டே குலுங்கக் குலுங்க ஓடித் தேடினாள், அவளை! காந்திமதி அவள் கண்களுக்குப் புலப்படவில்லை; சலித்துப் போனாள், சங்கரி!

காந்திமதி மலரும் தறுவாயிலிருந்த ஒரு முல்லை மொட்டை எட்டிப் பறித்தாள். சற்று நேரம் அதைப் பார்த்துக்கொண்டே நின்றாள். தென்றல் கொஞ்சம் வேகமாக வீசியது. மொட்டின் இதழ்கள் துடித்தன. அவள் கண்கள் படபடத்தன மெதுவாக மொட்டின் உள்ளிருந்த மணம் உந்த, இதழ்கள் விரிந்தன. அவள் 'அம்மா' என்று கூவிக்கொண்டே உள்ளே ஓடினாள்!

பிறகு, அவள் வெளியில் வரவேயில்லை. ஆம்... காந்திமதி பெரியவளாகி விட்டாளாம்!

2

அது நிகழ்ந்து ஐந்து மாதங்கள் மறைந்தன. கோடை விடுமுறையில் கிராமத்திற்கு வந்திருந்தேன். பயிற்சியின் பலனை எதிர் நோக்கியிருந்த சமயம், அது.

உமாபதிக்கு ஒரு கடிதம் எழுதலாம் என்ற எண்ணத்துடன் 'என் உயிரினுமினிய நண்ப...' என ஆரம்பித்தேன்.

"வணக்கம்" என்று ஒரு அன்புக்குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். உமாபதியேதான்...!

அவனை அன்புடன் வரவேற்று 'இப்படி உட்கார்...' என்று நாற்காலியை இழுத்துப் போட்டேன். அவன் "நாம் தேர்வில் வெற்றி, சந்திரா..." என்று கையில் வைத்திருந்த தினமணியில் எங்கள் நெம்பரைக் காட்டிக் கொண்டே அமர்ந்தான்.

என் தங்கை கங்காவைக் கூப்பிட்டு, "மோர் கொண்டு வா" என்றேன். அவளும் மோர் கொண்டு வந்து வைத்துவிட்டு உள்ளே போனாள்.

"வீட்டில் வேறு யாரும் இல்லையா?"—உமாபதி கேட்டான்.

"நாங்களும் எங்கள் தாத்தாவும் தான்..." என்றேன். அதற்குள் தாத்தாவும் வந்தார். "உமாபதியா! வாப்பா! எப்போது வந்தாய்" என்று விசாரித்தார். உமாபதியை அவர், போட்டோவில் இதற்கு முன்பு பார்த்திருந்ததால் சுலபமாக அடையாளம் கண்டு கொண்டார்.

"சரி! வாருங்கள் சாப்பிட்டு விட்டுப் பேசலாம்" என்று அழைத்துப் போனார்.

உமாபதி இரண்டு நாட்கள் தங்கினான். அவன் தன் ஊருக்குப் புறப்பட்டபோது, 'அடிக்கடி வந்து போ உமாபதி" என்று தாத்தா வழியனுப்பினார்.

"சென்று வருகிறேன், கங்கா" என்று உமாபதி என் தங்கை கங்காவிடம் விடை பெற்றபோது, 'உம்...' என்று நாணத்துடன் தலையாட்டி விட்டு உள்ளே போனாள், கங்கா!

புகை வண்டி நிலையத்தில், "மறந்து விடாதே. அடிக்கடி கடிதம் எழுது" என்ற என் அன்புக் கட்டளையுடன் வண்டியில் ஏறிய உமாபதி, "நீ பள்ளிக்கு வரும்போது அவசியம் வீட்டிற்கு வா, சந்திரா" என்று என் கையைக் குலுக்கினான்.

வண்டி நகர்ந்தது. எங்கள் இரு உள்ளங்களும் நட்பு வலிமையால் இறுகப் பிணைந்தன.

3

ஓராண்டு ஓடியது. இந்த ஒரு ஆண்டில் எங்கள் இரு குடும்பங்களும் நன்றாகப் பழகி விட்டன.

அடுத்த வருடம் 'நான் உனக்கே ஆசிரியனாக வருகிறேன்' என்று நான் ஒருநாள் சங்கரியிடம் கூறியது பொய்யாகி விட்டது. நான் எங்கள் ஊரிலிருந்து சுமார் இருபதுமைல் தூரமிருந்த ஒரு ஊரில் வேலை பார்த்தேன். அதுவும் கிராமப்புறம்தான்!

சங்கரி, தான் எட்டாவது படிப்பதாகவும் தன் தமக்கை காந்திமதி ஆரும் படிவம் படிப்பதாகவும் கடிதம் எழுதினுள். படித்து மகிழ்ந்தேன். பதில் எழுதினேன், 'நன்ருகப் படியுங்கள்' என்று!

காந்திமதிக்கும் என் மனத்திற்குள்ளேயே கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். என் மனத்திலேயே காந்திமதி இருக்கிருள். அவள் அகத்தின் காந்தத்தன்மை என்னை ஈர்த்தது! அவள முகமோ அன்பும் அமைதியும் நிறைந்த அறிவுப் பெட்டகம்; ஒளி வீசும் கண்ணுடி; அதனுல்தான் என் முகம் அவள் முகத்தில பளிங்கு போலத் தெரிந்தது. அவள் அகமும் முகமும் என் கற்பனைக்கும் கை கொடுத்தன!

ஒரு நாள்............

"கடிதம், சார்" என்ருர், தபால்காரர். வாங்கிப் படித்தேன். தாத்தா எழுதியிருந்தார். தங்கை கங்காவை உமாபதிக்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிருர்களாம். 'உனக்குச் சம்மதமா?' என்று கேட்டிருந்தார்.

என்ன மனத்துணிவு அவருக்கு? ஏற்பாடு செய்துவிட்டு என் சம்மதம் கேட்கிருர். என் சம்மதம் எதற்கு? வாழப் போகிறவன் நாஞ? தங்கையின் சம்மதத்தைக் கேட்டாரோ இல்லையோ? அவள் மனம் எப்படியோ?

உடனே அவசர அவசரமாக இரண்டு நாட்கள் சிறு விடுப்பு எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்த பிறகுதான் மூச்சுவிட்டேன். "என்ன கங்கா......" என்று திருமணத்தைப் பற்றிக் குறிப்பாகக் கேட்டேன். "விருப்பம்தான் அண்ணு...!" என்று சர்வசாதாரணமாகச் சொன்னுள், கங்கா.

"சரிதான்! அதிக முன்னேற்றம்தான்... அண்ணனுக்கு இப்பேச்சில் இடமேயில்லை போலிருக்கிறது......" என்று அன்புடன் அவளைக் கடிந்து கொண்டேன்.

இதில், மனத் துணிவு யாருக்கு? தாத்தாவுக்கா? கங்காவிற்கா? உமாபதிக்கா? ஆம்! என்னைத் தவிர மற்ற எல்லோருக்கும் தான்! இருந்தாலும், என் அன்புத்தங்கை கங்காவின் மணம்தானே? மகிழ்வெய்தினேன்......!

ஆனுல்............

படுக்கையில் சாய்ந்தேன். 'ஆனுல்... ஆனுல்' என்று ஆயிரம் ஆனுல்களைச் சொல்லிக் கொண்டு காந்திமதி என்னைச் சுற்றிச் சுற்றி வந்தாள். இனம் புரியாத இந்தக் கற்பனை அல்லது மாயத் தோற்றம்

என்னுள் ஏன் தோன்றியது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

காந்திமதியின் அழகிய வட்டவடிவ நிலவு முகமும் அந்த முகத்தில் சுழன்று கொண்டிருக்கும் கருவண்டுக் கண்களும் அடிக்கடி என் இதயத் திரையில் தோன்றி என் உடலைச் சிலிர்க்க வைத்தன.

ஆறு மாதங்கட்கு முன், ஒரு நாள்! நான், உமாபதி சங்கரி காந்திமதி ஆகியோருடன் மகாபலிபுரம் சென்றிருந்தேன். கலங்கரை விளக்கத்தின் அருகில் குன்றினுச்சியில் இருந்த கற்கோயிலைக் காண ஏறிக்கொண்டிருந்தோம். உமாபதி வேகமாக ஏறிச்சென்று விட்டான். சங்கரி என் கையை அவள் தோள்மீது உரிமையுடன் போட்டுக்கொண்டு நடந்தாள். காந்திமதி சற்று தூரம் தள்ளி நடந்து வந்தாள். கற்களில் நடக்க முடியாமல் காந்தியின் மெல்லிய பாதங்கள் சிவந்து விட்டன.

நானும், காந்திமதியும் ஒரே சமயத்தில் திடுக்கிட்டோம். தற்செயலாக, என் பழைய நண்பன் ஒருவன் தன் மனைவியுடன் எங்களுக்கு எதிரில் வந்து கொண்டிருந்தான். நாங்கள் 'வணக்கம்' செலுத்திக் கொண்டோம்.

காந்திமதியும் அவன் மனைவியும் பேசிக் கொண்டிருந்தனர். "யார் அது?" என்று காந்தியைப் பற்றிக் கேட்டான், நண்பன். நான் பொதுவாக, "தங்கை" என்றேன்.

அதே நேரத்தில் "உண்மையாக எங்கள் அண்ணன் தான்" என்று காந்தி, என் நண்பனின் மனைவியிடம் கூறியது என் காதில் விழுந்தது. நண்பனும் அவன் மனைவியும் ஒருகணம் பார்த்துக் கொண்டனர். அது எங்களைச் சந்தேகிப்பதைப் போல் இருந்தது. 'என்னை அண்ணன் என்று சொல்லாதே காந்தி' என்று சொல்ல என் நா துடித்தது. ஆனால் நானும்தான் அப்படிக் கூறிவிட்டேன்.

நான் இயற்கையிலேயே கூச்சமான சுபாவம் உடையவன். என்னுடைய நண்பர்களிடம் பேசும்போதுகூட ஒரு வகைக்கூச்சம் என்னை ஆட்டிப்படைக்கும். அதனாலேயே உமாபதியைத்தவிர நான் யாரிடமும் அதிகம் பழகுவதில்லை. அந்தக் காரணத்தால் தான் 'காந்திமதியை நான் காதலிக்கிறேன்' என்று நண்பனிடமோ பெரியவர்களிடமோ சொல்லும் வகை தெரியாமல் மனத்திற்குள்ளேயே அவள்மீது அன்பு செலுத்தி இதயம் புழுங்கிக் கொண்டிருந்தேன். நண்பனிடம் அறிமுகப்படுத்திய போதுகூட அந்தக் கூச்சத்தால்தான் அவளைப்பற்றி அதிகம் சொல்லாமல் பொதுவாகத் 'தங்கை' என்றேன்.

நண்பன் விடை பெற்றுப் பிரிந்தான். கொஞ்ச தூரம் நடந்ததும் காந்தியைப் பார்த்து, "அவர்கள் யார்? உனக்கு ஏற்கனவே தெரியுமா" என்று நண்பன் மனைவியைப் பற்றிக் கேட்டேன்.

"என்னுடன் எங்கள் பள்ளியில் படித்தவள்." காந்திமதி எண்ணிப் பேசினாள்; வார்த்தைகளை! முதன் முதலாக நாங்கள் பேசியதே இந்தத் தடவைதான்.

காந்திமதிமீது நான் எல்லையற்ற அன்பு செலுத்தி வந்தேனே தவிர அவள் என்னை விரும்புகிறாளா இல்லையா என்பதை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அதை எப்படித் தெரிந்துகொள்வது என்பதும் புரியவில்லை. அதைப்பற்றி அவளை ஏதாவது குறிப்பாகக் கேட்கலாம் என்று நினைத்தாலோ...' நினைக்கும் போதே வியர்த்துக் கொட்டியது; உடம்பும் நடுங்கியது ஆகையால் இன்னும் எப்போதாவது சந்தர்ப்பப்படும்போது அவளுடைய செய்கைகளின் மூலமாகவும், அவள் தனிப்பட்ட முறையில் என்னிடம் நடந்துகொள்ளும் குறிப்பினாலும் ஓரளவு தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் அன்று மகாபலிபுரத்தில் அதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை.

பிறகு, அவள் அண்ணனை அடைந்தோம்; அன்று மாலையே வீடு திரும்பினோம்.

சில நாட்கள் கடந்தன......

நான் சற்றும் எதிர்பாராத வகையில் அன்றைய தபாலில் எனக்கு உமாபதி எழுதிய கடிதம் ஒன்று வந்தது!

காந்திமதிக்குக் கல்யாணமாம்! அவள் யாரோ ஒருவனுக்குச் சொந்தமாகி விடப்போகிறாளாம்...! ஏற்பாடு செய்துவிட்டார்களாம்!

'அடி பாவி' என்று அழுவேனா? 'அடபாவி' என்று நண்பனைப்பற்றி நினைந்து கதறுவேனா...? யாரையும் குறைசொல்லிப் பயனில்லை. காந்தியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தை நான் இதுவரை யாரிடமும் சொல்லாமல் மூடி மூடி வைத்திருந்த என்மீதுதான் எல்லாக் குற்றமும்! 'அதற்குள் அவசரப்பட்டு வெளியில் சொல்வானேன்; முதலில் தங்கையின் திருமணம் முடியட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று வேறு எண்ணியிருந்தேன். அதுவும் தவறாகப் போய்விட்டது! இப்போது, அவளை வேறு ஒருவனுக்கு மணம் பேசி முடித்து விட்டபிறகு என் கருத்தை நான் எப்படி வெளியிடுவது என்று எனக்குள்ளாகவே மனம் வெதும்பிப் பேசாமல் இருந்து விட்டேன்.

கங்காவுக்கும் உமாபதிக்கும் கலியாணம்! அதே நேரத்தில் அதே பந்தலில காந்திமதிக்கும் யாரோ ஒருவனுக்கும்...! என் கண்கள் எந்தக் கல்யாணததைப் பார்க்கும்?

எனக்குத் தெரியாமல் எத்தனையோ நிகழ்ச்சிகள்......ஏற்பாடு கள்...! நான் மனிதனுகவே யார் கண்ணிற்கும் தெரியவில்லையா?

உலகமே சூன்ய மயமாகிவிட்டது, எனக்கு! எதையும் எதற் காக என்று கேட்கக கூடாதென எனக்கு நானே கட்டுப்பாடு விதித் துக்கொண்டு தன்னிரக்கத்துடன் இருந்து விட்டேன்!

4

மணமனே......

உமாபதியின் பக்கத்தில் கங்கா! யாரோ ஒருவன் அருகில் காந்திமதி......

காந்திமதி... என் இதயத்தைப் பிய்த்துக்கொண்டு எங்கோ பறந்து செல்கிருள்; அவள் என்னை ஏறிட்டுப் பார்க்கவில்லை. நான் மட்டும் ஏன் அவளைப் பார்க்க வேண்டும்? என்னருகில்...... சங்கரி நின்று கொண்டிருந்தாள். அவள் பருவமடைடம் சமயம்! இதே நிலையில்தான் நான் முதன் முதலில் காந்திமதியைப பார்கதேன். அவளைப பற்றி நான் கட்டியிருந்த மனக்கோட்டைகளெல்லாம் எப் படிச் சிதறிவிட்டன. என் கண் இமைகளை நீர் நனைத்தது!

"ஏன் அழுகிறீர்கள்......" என்று கண்களில் நீர் ததும்ப என் கைகளைப் பற்றிக் கொண்டு கேட்டாள், சங்கரி! என்னுல் அவளுக்குப் பதில் சொல்ல முடியவில்லை! எதிரில இருந்த யாரும் எனக்குத் தெரியவில்லை. கொட்டு மேளம் முழங்கியது; தாலி கட்டினுர்கள் போலும்......!

மூன்று மாதங்கள் கழிந்தன! சங்கரிக்கு மஞ்சள் நீர்ச் சடங்கு என்று அழைப்புக் கடிதம் வந்தது; சென்றேன். காந்திமதியும் வந்திருந்தாள். களை இழந்திருநதது அவள் முகம்! ஏதாவது அவளைக் கேட்கவேண்டுமே என்றெண்ணி "காந்தி! ஏன் இப்படி இளைத்து விட்டாய்?" என்றேன்.

"உங்களுக்கு ஆண்மையில்லாததால், என் இன்பக் கோட்டை கள் இடிந்து விட்டன!"—என்ருள், இதயக் குமுறலுடன்.

முன்பு ஒரு தடவை பேசினுளே, அதைப போல ஒரே ஒரு வாக்கியமே பேசினுள். ஆனுல் அதில் எழுந்த ஏக்கம் என் இதயத் தில் எதிரொலித்தது நான் அதிர்ச்சியடைந்தேன்! அப்படியென்

னால், நான் அவளை விரும்பியதைப்போலவே அவளும் மனத்திற்குள்ளேயே என்னை விரும்பியிருந்தாளா? அவள்தான் பெண்! அய்யோ! நானாவது அதைப் புரிந்துகொண்டு என் விருப்பத்தையும் அவள் விருப்பத்தையும் எல்லோரிடமும் சொல்லியிருக்கலாமே! அந்த விஷயத்தில் என் முட்டாள்தனமும் ஏமாளித்தனமும் எனக்கே தெரிந்தன. காலம் கடந்த பிறகு எது தெரிந்து எப்படி உணர்ந்து என்ன பயன்?

என் இருதயத்தை இறுகப் பிடித்துக் கொண்டேன்! எனக்கு ஆண்மை இல்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். உமாபதி என்னைவிட எத்தனையோ பங்கு மேலானவன்!

இரு மனங்கள் இன்று ஒருமித்து வாழ்கின்றன; தம் திறமையால்... எண்ணங்களை வெளியிட்டதால்! ஆனால், அதே போன்ற இரு உள்ளங்கள், இன்று மனத்தின் எண்ணத்தை அங்கேயே மங்க விட்டுவிட்டுக் கொந்தளித்துக் குமுறிக் கொண்டிருக்கின்றன.

மறுபடியும் காந்திமதியைக் கண்ணால் பார்க்கவும் நான் விரும்பவில்லை. அவள்தான் வேறொருவன் மனைவியாகி விட்டாளே; எப்படிப் பார்ப்பது......? சங்கரியையும் சந்திக்கவில்லை......!

சங்கரி இன்று காந்திமதியைவிட எத்தனையோ பங்கு அழகாக இருக்கிறாள். அவளும் ஒரு நாளைக்குத் தன் தமக்கையைப் போல யாராவது ஒருவன் கையைப் பிடித்துக்கொண்டு போய் விடுவாள். இப்போது இருப்பது போதாதென்று மறுபடியும் மனத்தை சஞ்சலப் படவிட்டுத் துன்பமே உருவாகச் சுற்றுவானேன்—அதனால், அவர்கள் யாரையும் சந்திக்க விரும்பவில்லை. அன்றே வீடு திரும்பினேன்.

என்றோ எதற்காகவோ நண்பன் என்ற முறையில் சென்றேன், உமாபதியின் வீட்டிற்கு! அதன் விளைவு......?

என்ன என்னவோ மாயாஜாலங்களைச் செய்துவிட்டது, காலச் சக்கரம்! அதன் பயன் என் வாழ்க்கைதான் நாளுக்கு நாள் தேய்பிறையாகி வருகிறது.

என் வாழ்க்கை.........!

என் சிந்தனை இதையே சுற்றிச்சுற்றி வட்டமிடும் நான் இப்படியே புறப்பட்டு என்னால் முடிந்தவரை ஓடி, என் சக்தி அடங்கும் வரை ஓடி, எங்காவது யாரும் இல்லாத இடத்திற்குப் போய் விட்டால் ஒரு வேளை என் மனம் அமைதி அடையலாம். இல்லற இன்பம் நுகர்ந்து—உலக விவகாரங்களில் ஈடுபட்டு—குழந்தை குட்டிகளைப் பெற்று—வாழ்க்கையே கசந்துபோய் துறவறம் பூண்டு

அலையும் சந்நியாசிகளின் மனம் எப்படி இருக்கும்? அது எனக்குத் தெரியும் நானும் அப்படிப் போனால்தான் ஓரளவாவது வாழும் மனிதனாவேன்! இன்றேல் நடைப்பிணம்தான். ஊரில் எனக்குப் பைத்தியக்காரப் பட்டம்! முன்பெல்லாம் 'அண்ணா அண்ணா' என்று மழலை மொழி பேசி என்னிடம் விளையாட ஓடிவரும் குழந்தைகள் இப்போது என்னைக் கண்டால், 'சோணங்கி வாத்தியார் வரார்ரா டோய்' எனக் கூக்குரல் இடுகின்றனர். உலகத்தின் ஒரு மூலையில் முற்றாது கிடக்கும் பிஞ்சுகள்தாமே இவை! பெரியவர்களுக்கு இருக்கும் அகம்பாவ உணர்ச்சியும் இரக்கமற்ற தன்மையும் அவைகளுக்கும் இல்லாமல் போய்விடுமா என்ன?

ஒரு தடவை உமாபதி எங்கள் பள்ளிக்கு வந்திருந்தான். என்னிடம் படிக்கும் காந்தாமணி என்ற பெண் அவனுக்கு நன்றாகத் தெரியும். எப்போதும் போலவே, அன்றும் அவன் எதிரில் அப் பெண்ணை 'காந்திமதி' என்றே கூப்பிட்டு விட்டேன். பிறகுதான் தவறை உணர்ந்தேன். அவன் என்ன நினைத்தானோ? நான் எந்தப் பெண்ணைக் கண்டாலும் அவள் காந்திமதியாகவே தெரிகிறாள்.

அன்று தந்தி வந்தது, 'காந்திமதிக்கு உடம்பு சரியில்லை....... உடனே வரவும்'—என்று! நான் பதைபதைத்துப் போனேன். கிராமத்திற்குப் பறந்தோடிச் சென்றேன்.

காந்திமதி! சங்கரி, கங்கா, உமாபதி இன்னும் நான்கைந்து பேர்களுக்கு மத்தியில் காந்திமதி கட்டிலில் படுத்துக் கிடந்தாள்! முகம் வெளுத்திருந்தது. உதடுகள் உலர்ந்து வற்றிக் கிடந்தன. கண்கள் செருகின. நான் பேசாமல் நின்றிருந்தேன். அதற்குள் அவள் கணவன் வந்தான்.

"காந்தி! உன் கணவர்"...என்று கதறினான், உமாபதி! திரும்பி மெதுவாகக் கண்களைத் திறந்தாள். அவள் உலர்ந்த உதடுகள் அசைந்தன.

"இவர் உங்கள் கணவர் அண்ணா! என் கணவர்....வருவார்..." என்று வறட்டுப்புன்னகையுடன் கூறிவிட்டு எல்லோரையும் ஒரு முறை மங்கிய பார்வையால் பார்த்து வந்தாள் என்னைக் கண்டதும் அவள் முகம் ஒளி வீசியது. "இதோ......இதோ......அவர்" என்று எழுந்து விட்டாள்.

"காந்திமதி.........!"

என் உணர்ச்சிகளை எல்லாம் கொட்டினேன். அவள் என்னைக் கூர்ந்து பார்த்துவிட்டு "என்ன இப்படி இளைத்து விட்டீர்கள்? முகம் கருத்து வாடிவிட்டது. தாடியும் மீசையுமாக இருக்கிறீர்

களை?'' என்று அந்த மரணப் படுக்கையில்கூட எனக்காகப் பரிந்து வருந்தினாள்.

''நான்தான் காந்தி, காரணம். அம்மாவுடன் சேர்ந்து கூத்தாடி விட்டேன், உங்கள் மனநிலை தெரியாமல்! மன்னித்து விடுங்கள், என்னை!''

தலையிலும், முகத்திலும் இரு கைகளாலும் மாறி மாறி அடித்துக் கொண்டு கதறினான் உமாபதி பயங்கரமான அமைதியைக் குலைக்கும் வண்ணம். அனைவரும் 'கோ...'. என்று அலறிக் கதறினர்.

காந்தி என் இரு கைகளையும் பற்றிக்கொண்டு ''சங்கரியையும் என் நிலையில் விட்டு விடாதீர்கள்......'' என்று சொல்லி, என் கைகளால் அவள் முகத்தை மூடிக்கொண்டாள். ''இது என் வேண்டுகோள். நீங்கள் மறுக்கவே கூடாது. சங்கரி உங்களை உயிரினும் மேலாகக் காதலிக்கிறாள். அவள் மனம் குளிரும்படி நீங்கள் அன்போடு அவளைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி சங்கரியை என் கையில் ஒப்படைத்தாள்.

எங்களை இணைத்து வைத்த அந்தப் பேசும் பொற்சித்திரம் அதன் பின்னர் பேசவேயில்லை. என் இதயத்திலிருந்து பீறிட்ட இரத்தம் கண்ணீராகவும் பெருமூச்சாகவும் வெளியே வந்தன!

இரண்டு மாதங்களாக இங்கேயே என் தங்கை வீட்டிலேயே தங்கியிருக்கிறேன். என் தங்கை கங்கா என் உடலை நன்கு பரா மரித்து வருகிறாள். எனக்கு உலகமே இன்ப மயமாகத் தெரிகிறது. எல்லாம், 'இன்பம்... இன்பம்... இன்பம்...!' என் சங்கரி எனக்காக இருக்கும் வரை, எல்லாம் இன்பம்தான்! என் நொந்துபோன உள்ளத்தில், தெவிட்டாத தெள்ளமுதை ஊற்றி வருகிறாள் சங்கரி.

ஒரு காலத்தில் 'காந்திமதிதான் என் உயிர்–வாழ்க்கை–உலகம் எல்லாம். அவள் இல்லையேல் எதுவுமே இல்லை' என்று எண்ணி னேன். ஆனால், இப்போது சங்கரியைப் பார்க்கும் போதெல்லாம் இன்னும் எனக்கு வாழ்க்கை – உலகம் – இன்பம் எல்லாமே இருப் பதுபோல் தோன்றுகிறது. காந்திமதியின் கடைசி ஆசையை நிறைவேற்றவேண்டாமா?

மனிதன் மனம் ஒரு காற்றாடி; சந்தர்ப்பச் சூழ்நிலை எனும் காற்று வீசும் பக்கமெல்லாம் பறக்கும் விசித்திரமான காற்றாடி. சூழ்நிலைக்குத் தக்கவாறு மனத்தை மாற்றி மாற்றி அமைக்கும் கால தேவன் சக்தி மிகவும் விந்தைக்குரியது!

என் தங்கையும், உமாபதியும் எங்கள் திருமணத்திற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்து வருகின்றனர். ஒரு நாள் சங்கரியின் அறைக்குச் சென்றேன். அவள் மேசையில் ஒரு கடிதம் இருந்தது. அதில், "அன்புள்ள அத்தான் சந்திரன் அவர்கட்கு......" என்று எழுதியிருந்தாள். வேறொன்றும் இல்லை என்னென்ன எழுத நினைத்தாளோ, அதையெல்லாம் மணமானபின் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். அது என் சாமர்த்தியம்! ஆனால்......,

நீங்கள் மட்டும் திருமணத்திற்கு வந்து எங்களுக்கு நல்வாழ்த்துக் கூறுங்கள். அநேகமாக அடுத்தவாரம் திருமணம் நடக்கும். நாள் நிச்சயித்த பிறகு உங்களுக்குக் கட்டாயம் தந்தி அனுப்புகிறோம், நானும் சங்கரியும் சேர்ந்து! தட்டாமல குடும்ப சகிதமாக வந்து விடுங்கள். இங்ஙனம் தங்கள் அன்பிற்குப் பாத்திரமானவர்களும், தங்கள் வருகையை எதிர்நோக்கிக் கொண்டிருப்பவர்களுமான மணமக்கள்,

'சங்கரி.........சந்திரன்'

முற்றும்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

பனுக :- சொல்லுவதற்கு
க்ஷணமு பட்டு :- க்ஷண நேரமே ஆகும்!
தானி நிலுவதிய :- அதையே சாதிப்பதற்கு
தாதலு :- இறந்த மூதாதையர்கள்
திகவலே :- சொர்க்கத்திலிருந்தே வரவேண்டியதாகிறது.

இதன் பொருள்:—பிறர் செய்யும் எந்த நல்ல காரியத்தையும் "சரியல்ல" என்று மூர்க்கர்கள் க்ஷண நேரத்தில் சொல்லி விடுவது வழக்கம். அப்படிச் சொல்லுவது மிக சுலபம். ஆனால், அதை அங்கீகரித்துப் பாராட்டுவதற்கு இறந்த நம் மூதாதையர்கள் சொர்க்கத்திலிருந்து கீழே இறங்கி வந்தாலும் (மூர்க்கர்கள்) ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

—"தினமணி"

ஆந்திரத் துறவி — வேமனு

(எஸ். என். ஸ்ரீராம தேசிகன்)

ஆடை உடுப்பதில்லை. கௌபீனம் ஒன்றுதான் உண்டு. ஆந்திர தேசம் முழுவதையும் சஞ்சாரம் செய்திருக்கிருர். பள்ளிக்கூடம் சென்றதில்லை. சாஸ்திரங்களும் கற்றதில்லை. கவிதை எழுதக் கற்கவும் இல்லை. இலக்கண முறைப்படி எழுதவும் தெரியாது. எனினும், யோக பலத்தால் அழகிய கவிதைகளை இயற்றிச் சிறந்த கவியெனப் புகழ் பெற்றுவிட்டார். இவர் யாரெனக் கேட்கிறீர்களா? யோகி வேமனுவைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

இவர் கொண்டவீடு ரெட்டி குலத்தில் வேமா ரெட்டிக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அனந்தபுரம் மாவட்டம், கதிரி தாலுகாவைச் சார்ந்த கடாரபல்லி இவரது சொந்த ஊராகும். இதற்கு அவரது கவிதைகளே சான்றெனக் கூறலாம். இன்றைக்கும் வேமனுவின் வமிசத்தினர் அவருடைய சமாதிக்குப் பூஜை செய்து வருகின்றனர். இவர் சீர்திருத்த வாதி. மூட நம்பிக்கையை வெறுத்தவர். உள்ள தவற்றை எடுத்துக் கூறத் தவற மாட்டார். முன்ஞேர்கள் சொல்லியதை அப்படியே ஆராயாது அப்படியே ஒப்புக் கொள்வதும் இவருக்குப் பிடிக்காது. அழகிய கருத்தை உணர்ச்சியோடு பேசுவார். இலக்கணக் கட்டுப்பாடுகளை அதிகம் பார்க்க முடியாவிடினும், சுவைப்பதற்கு மிகவும் அருமையுள்ளதாக இருக்கும்.

உலக வாழ்க்கை, மனிதர்களின் மனோபாவங்கள், மதம், ஆசாரம், சாஸ்திரம் எனக் கூறிக் கொண்டு அவைகளுக்கே தீங்கு இழைப்பவர்களின் நிலை ஆகியவற்றைத் தத்ரூபமாய்ச் சித்தரித்துக் காட்டுகின்றார் கவி. இதைப் படிக்கும்போது மனம் சற்று புண்படும். அடுத்த நிமிடமே அதில் உள்ள உண்மையை உணர்ந்து அவர்களே பூரித்துப் போவர். இவரது கவிதைகளை இளஞ்சிறுவர்கள் நீதிநூலாகவும், பெரியோர்கள் வேதாந்த நூலாகவும், விமரிசகர்கள் ஆராய்ச்சிக்குரிய பெட்டகமாகவும், பக்தர்கள் பக்தி நூலாகவும், கவிகள் சிறந்த காவியமாகவும் எண்ணிப் போற்றி வருகிருர்களென்றால் இவைகளின் பெருமையை என்னென்று உரைப்பது!

கிரேக்க மொழியில் லூகியன் கவியைப் போல் ஆந்திர மொழியில் வேமனு மிக்க சிறப்புடைய கவி. 'வசன நடையா? அல்லது செய்யுள் நடையா?' என்று கூடச் சந்தேகிக்குமளவில் மிக

-வும் எளிய நடையில் அமைந்திருக்கும், இவரது பாடல்கள்.

சிறிய விருத்தங்கள், உவமையோ உலகானுபவமோ நகைச் சுவையோ இல்லாத கவிதையை நூலில் தேடிப் பார்த்தாலும் காண்பதரிது. எளிய சொற்கள் தெள்ளுநடை, பாமரர்களும் எளிதில் புரிந்து கொள்ளலாம். உண்மைக்கு மாறான எவ்விஷயத்தையும் கவிஞன் கூறியது இல்லை. உள்ளதை உள்ளவாறே கூறியிருக்கிறார் என்று இவரைக் குறை கூறும் ஒரு சிலரும் இருக்கிறார்கள். ஆந்திர நாட்டில் இவரது பத்தியங்களின் சில பகுதியையாவது அனைவரும் படித்தேயிருப்பார்கள்.

அகராதி முதலியவற்றிலிருந்து சொற்களைப் பொறுக்கியெடுத்துப் பெருமுயற்சி கொண்டு இவரது கவிதைகள் அமையவில்லை. எளிமைக்காகச் சிற்சில இடங்களில் யதி - சந்தஸ் - பிராஸம் போன்ற சில இலக்கண முறைகளையும் கவி மீறியிருக்கிறாரெனச் சில பண்டிதர்கள் இன்றைக்கும் குறை கூறி வருகின்றனர். இருந்தாலென்ன? குழந்தைகள் பேசுவது போலிருக்கும் இவரது கவிகள். இவற்றிற்கு உரையும் வேண்டாம்; விளக்கமும் தேவையில்லை.

உத்ப்ரேக்ஷை, வருணனை, அதிசயோக்தி போன்ற சாதாரண அலங்காரங்களையும் சிறிதும் காண்பது முடியாது. ஸ்வபாவோக்தியே எங்கும் மலிந்திருக்கும். இதிலுள்ள உவமைகளும் தற்கால நடைக்கேற்றவாறு அமைந்திருக்கின்றன. இப்படிப்பட்டதொரு சிறப்பை வேறு எந்தக் காவியத்திலும் காண முடியாது. மிகக் கடினமான வேதாந்த ரகசியங்களையெல்லாம் அழகான உவமைகளைக்கூறி, வேதாந்தம் என்ற சொல்லைக் கேட்டு இது நமக்குப் புரியாதென்று பயந்தோடியவர்களுக்கும் ஆர்வத்தை ஊட்டி விட்டாரென்றால் பெரியோர்கள், மதாசாரியர்கள் இவர்களது பணியை விட இப்பெரியாரது பணியே மேலானது எனக் கூறுவதில் தடை என்ன?

இக் கவி பாரபட்சமின்றி எல்லாச் சாதி மதங்களிலுள்ள குறைகளையும் தைரியமாக அப்படியே எடுத்துக்கூறுகிறார். மதம், ஆசாரம் எனச் சொல்லிக் கொண்டு செய்யும் அக்கிரமங்களைக் கண்டு சகிக்காமல் மனம் நொந்து சிறிது கடுமையாகவே பேசி, ஒரு சிலருடைய நிந்தைக்கும் பாத்திரமாகிறார். விரதம், உபவாசம், விக்கிரஹ பூசை, சந்நியாசம், மொட்டையடித்தல், தெய்வப்பிரார்த்தனை இவைகளில் இவருக்கு நம்பிக்கை கிடையாது என்பது இவரது கவிதைகளைப் படிப்போருக்குத் தெளிவாகும். யோகம் ஒன்றே முக்தி பெறப் போதுமானது என்ற வழியைக் கடைப் பிடித்தவர் இவர். பெண்களையும், அவர்களது சில போக்குகளையும் பற்றி அளவு கடந்து இவர் ஆராய்ந்திருப்பதை யாவரும் அறியலாம்.

காலஞ் சென்ற டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்கள் 'கவித்வ தத்துவ விசாரம்' என்ற தனது நூலில் 10, 11, 12, அத்தியாயங்களில் யோகி ஸ்ரீ வேமனாவைப் பற்றி இவ்வாறு எழுதுகிறார்.

"இவருக்குப் புத்தக அறிவு முற்றிலும் கிடையாது. இலக்கணம், சந்தஸ், அலங்காரம் இவைகள் இவருடைய நூலில் எவ்வளவு குறைவோ, கடவுள் பக்தியும் கவிக்கு அவ்வளவு குறைவாக உள்ளது. போலி மதாசாரங்கள், மூட பக்தி, வெளி வேஷம் ஆகியவைகளைக் கண்டிப்பதில் நிகரற்றவர். எல்லா விஷயங்களையும் ஆதாரத்தோடு ஆராய்ந்து பார்த்து உண்மையைக் காண்பதில் உத்தமமாக விளங்குபவர்."

மூலிகையின் சேர்க்கையால் இரும்பைத் தங்கமாக்கும் தந்திரத்தைப் பல இடங்களில் பரக்கக் கூறியிருக்கிறார். இம் முயற்சியில் கவி சிறிது காலம், ஈடுபட்டிருந்ததாகவும் சிலர் கூறுவதுண்டு. இவரது வாழ்க்கை வரலாறு யாதெனை எழுத யாரும் முன்வரவில்லை.

இதனால் இவர் சாதாரண மக்களுடைய ஆதரவையும் பெற்று விட்டார். கோவையாக ஒரு விஷயத்தை எடுத்துக் கூறாமல் ஆங்காங்குத் தனக்குத் தோன்றியவற்றை யெல்லாம் பேசுவதால் செய்யுட்களுக்கு ஒன்றோடொன்று தொடர்பு இருப்பதாகத் தோன்றுவதில்லை. தன் மனம் போனபடி யெல்லாம் பேசுவதால் இக்கவிதைகளுக்குத் தனிப்பட்டதொரு அழகும் பெருமையும் ஏற்படுகிறதெனச் சொல்லலாம்.

"ஆடவெலதி" என்னும் அழகிய சிறிய விருத்தத்தில்தான் காவியம் பெருகவாக அமைந்திருக்கிறது. ஸ்ரீநாதகவியின் 'ஸீச' பத்யத்தையும், ஸ்ரீ திக்கண கவியின் 'கந்த' பத்யத்தையும் தனிப் பெருமை வாய்ந்ததாகக் கூறுவது போல் வேமனாவின் 'ஆடவெலதி' பத்யங்களை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதுண்டு. ஆயிரக் கணக்கான செய்யுட்களை ஆதியில் கவி இயற்றினார். இவைகளின் எண்ணிக்கை என்ன வெனச் சொல்லவும் முடியாது.

டாக்டர் சி. பி. ப்ரௌன் (மெட்ராஸ் சிவில் சர்வீஸ்) என்ற ஆங்கில அறிஞர் ஆந்திர நாடு முழுவதும் சஞ்சாரம் செய்து தனக்குக் கிடைத்த வேமனாவின் 2000 கவிதைகளுக்குள் சந்தேகத்திற்கிடமான பலவற்றை அகற்றி 700 செய்யுட்களை மட்டும் மூன்று அத்தியாயங்களாகப் பிரித்து, அதற்கு ஓர் ஆங்கில உரையையும் வரைந்து 1911-ம் ஆண்டில் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். பிறகு ஆங்காங்கு தங்களுக்குக் கிடைத்த மட்டில் 2000, 2500 இப்படிப் பல உருவில் இதை வெளியிட்டுப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். கவி புத்தகத்திற்குப் பெயரொன்றும் சூட்டவில்லை. பின் புள்ளவர்

களும் 'வேமன பத்யமுலு' என்ற தலைப்புடன் மட்டும் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். செய்யுட்களின் வரிசையில் கவி எந்த ஒரு திட்டமான முறையையும் கையாளவில்லை! பின்புள்ளவர்கள் விஷயத்திற்குத் தக்கவாறு அவைகளை அத்தியாயங்களாகப் பிரித்து வைத்தனர். 'வாவிள்ள' அச்சகத்தினர் 2928 செய்யுட்களை 19 பத்ததிகளாகப் பிரித்துக் கூடியவரை அந்தந்தப் பத்ததிகளுக்குப் பொருத்தமான செய்யுட்களை அந்தந்தப் பத்ததிகளுள் ஒன்றாகச் சேர்த்து அச்சிட்டிருக்கிறார்கள்.

கவியின் காலம் 17-ஆம் நூற்றாண்டு என்று ப்ரௌன் துரை ஆதாரத்தோடு எழுதியிருக்கிறார். 15-16-ஆம் நூற்றாண்டு என்பது பல பண்டிதர்களின் அபிப்பிராயம். ஒவ்வொரு கவிதையினுடைய நான்காவது அடியானது—"விஸ்வதாபிராமவினுரவேம." (உலகத்தவரால் கொண்டாடப்படும் வேமனுவே இதைக் கேள்) என்று தன்னைப் பார்த்துத் தானே பேசிக் கொள்வது போல் அமைந்திருக்கிறது.

வேமா, வேமா ரெட்டி, வேம பூபால, வெர்ரி வேமனு என்று பலவாறு துறவி தன்னைத்தானே அழைத்துக் கொள்கிறார்! வேமா ரெட்டி என்பது இவருடைய உண்மைப் பெயர். கண்டிக் கோட்டைக்குச் சேனாதிபதியான தனது மூத்த சகோதரனைப் பார்த்துப் பார்த்துப் பேசுவதாகப் ப்ரௌன் துரை இதற்குப் பொருள் கூறுகிறார். பிரபல ஹிந்தி கவி கபீர்தாஸருடைய ஆயிரக்கணக்கான கவிதைகளும் வேமனுவின் கருத்தையே முற்றிலும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. தற்போது வெளியாகி யிருக்கும் 'கபீர் பத்ய மாலா" என்ற நூலைப் படிப்பவர்களுக்கு இவ்வுண்மை நன்கு விளங்கும். பழைய சம்பிரதாயம், ஆசாரம் ஆகியவற்றை விமரிசிப்பதில் தைரியமாய் விமரிசிப்பதில் தைரியமாய் விமரிசித்துக் கண்டிப்பதில் இருவருக்கும் ஒற்றுமை அதிகம் இருக்கிறது.

வேமனுவின் நீதிமொழிகளில் ஒன்றினை இங்குக் காண்போம்:

அவுனடஞ்சு நொக்க டாடின மாடகு
காதடஞ்சு பலுக க்ஷணமு பட்டு
தானி நிலுவதீய தாதலு திகவலே
விச்வதாபிராம விநுர வேம.

அவுனடஞ்சு :- ஆம் என்று
ஒகடாடின மாடகு :- ஒருவன் சொல்லும் பேச்சுக்கு
காதடஞ்சு :- சரியல்ல என்று

(28-ம் பக்கம் பார்க்க)

எழில்மிகு வாஷிங்டன்

[சி. சுப்பிரமணியம், மத்திய அரசாங்க இரும்பு எஃகுத்துறை அமைச்சர்.]

வாஷிங்டன் நகரம் இன்று உலகப் பிரசித்தி பெற்றது. உலக நாடுகளில் முன்னணியில் நிற்கும் அமெரிக்க சர்க்காரின் இருப்பிடம் அது. நம் நாட்டின் தலை நகராகிய புது டில்லி எவ்வாறு தலை நகருக்கென்றே நிர்மாணிக்கப்பட்டதோ, அதேபோல் வாஷிங்டன் நகரமும் அமெரிக்க சர்க்காரின் தலைமை இருப்பிடமாக அமைவதற்கென்றே திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டது.

காலனி ஆட்சியிலிருந்து விடுபட்டு, சுதந்திர அமெரிக்க சர்க்கார் ஏற்பட்ட ஆரம்பகாலத்தில், சர்க்கார், நிர்வாகத்தை நியூயார்க் பட்டணத்திலிருந்துதான் நடத்தி வந்தது. அதற்குப் பிறகு சிறிது காலம் பிலடெல்பியா என்ற நகரிலிருந்து நடத்தி வந்தது. எந்த இடத்தில் ஸ்திரமான தலைநகரை அமைப்பது என்பது பற்றி, அக்காலத்தில் பெரிய வாதம் நடந்து வந்தது. கடைசியாக எந்த ராஜ்யத்திற்கும் உட்படாமல் தனியான ஒரு இடத்தில் தலை நகரைக் கட்ட வேண்டுமென்று முடிவுக்கு வந்தார்கள். அத் தலை நகரில் சர்க்கார் காரியாலயங்களும், ஜனாதிபதியின் இல்லமும் அமையவேண்டும் என்றும் முடிவு செய்தார்கள்.

சுதந்திர அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியான ஜார்ஜ் வாஷிங்டன் அவர்களால்தான் இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த இடத்தின் பரப்பளவு நூறு சதுர மைல்கள். இந்த இடத்திற்கு வாஷிங்டன் அவர்களின் பெயரே வைக்கப்பட்டது. இது எந்த ராஜ்யத்திற்கும் உட்பட்டதல்ல. எனவே, இங்கு வாழும் மக்களுக்கு ராஜ்ய சபைகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவோ, அல்லது தேசிய காங்கிரஸ் சபைக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவோ ஓட்டுரிமை கிடையாது. இந்த உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சி நடைபெற்று வருகிறது. இன்னும் இரண்டாண்டுகளில் அந்த உரிமை அவர்களுக்குக் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

தலைநகருக்காக இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தபோது, அமெரிக்க சர்க்காருக்கு உட்பட்டுப் பதின்மூன்று ராஜ்யங்களே இருந்தன. இந்தப் பதின்மூன்று ராஜ்யங்களுக்கும் மையமாக இருக்கக்கூடிய இடமாக வாஷிங்டன் அமைந்திருந்தது. ஜார்ஜ் வாஷிங்டன் அவர்களே இந்நகரை நிர்மாணிப்பதில் பெரும் அக்

களை எடுத்துக் கொண்டார்களாம். பிரான்ஸ் தேசத்து என்ஜினியர் ஒருவருடைய உதவி கொண்டு, நகரின் அமைப்பு நிர்மாணிக்கப்பட்டது.

1771-ம் ஆண்டிலே சர்க்கார் தலைமைக் காரியாலயத்திற்கு ஜார்ஜ் வாஷிங்டனால் கால் கோள் விழா நடத்தப்பட்டது. 1800-ம் ஆண்டில்தான், பிலடெல்பியாவிலிருந்து வாஷிங்டனுக்குத் தலைநகர் மாறியது. ஆனால் அதற்குள்ளாக ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் காலமாகி விட்டார். அதற்குப் பிறகு ஜனாதிபதியாக வந்த தாமஸ் ஜெபர்சன் என்பவர் தான், முதன் முதலில் வாஷிங்டன் தலைநகரில் ஜனாதிபதியாக அமர்ந்தார்.

வாஷிங்டனுக்குத் தலைநகர் மாற்றப்பட்டபோது 120 அதிகாரிகள்தான் சர்க்காரிலே பணியாற்றி வந்தனர். இன்றைக்கு வாஷிங்டனுக்குச் சென்று பார்த்தால், லட்சக்கணக்கான அதிகாரிகள் பல்வேறு இலாகாக்களில் பணியாற்றுவதைக் காணலாம். தற்போது வாஷிங்டனுடைய ஜனத்தொகை எட்டேகால் லட்சம். ஆனால் வாஷிங்டனில் பணியாற்றும் பெரும் பகுதி மக்கள், நகருக்குப் பக்கத்தில் உள்ள மற்ற இடங்களிலெல்லாம் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களையும் சேர்த்துக் கொண்டால் மக்கள் தொகை இருபது லட்சமாகும்.

வாஷிங்டன் இன்று உலகிலேயே மிகவும் அழகான நகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. போடோமாக் என்ற நதிக்கரையில், அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் அமைந்திருக்கிறது இந்நகரம். பல பூங்காக்கள் நிரம்பிய இந்நகரம், ஒரு பெரிய காட்டின் மத்தியில் அமைந்துள்ளது. இந்நகரப் பகுதியில் இருக்கக்கூடிய மரங்களின் எண்ணிக்கை, வேறு எந்த நகரிலும் இல்லை என்று சொல்லப்படுகிறது. வாஷிங்டன் நகரில் விசாலமான சாலைகள் இருக்கின்றன. இருமருங்கிலும் அழகிய மரங்கள், எழில்மிகு கட்டடங்கள். தெருவிற்குள் செல்லும் போதே எவர் மனத்தையும் கவரக்கூடிய முறையில் இந்நகர் காட்சி அளிக்கின்றது.

அமெரிக்க நாடு பல அடுக்கு மாளிகைகளுக்குப் பெயர் போனது. ஆனால் இத்தகைய உயர்ந்த கட்டடங்களை வாஷிங்டனில் காண முடியாது. அங்கு பெரும்பாலானவை இரண்டு அல்லது மூன்று அடுக்குக் கட்டடங்கள்தான்.

வாஷிங்டன் நகருக்கு நடுநாயகமாக அமைந்திருப்பது சர்க்கார் தலைமைக் காரியாலயம் கேபிடல் என்று அதன் பெயர் கேபிடல் ஒரு சிறிய குன்றின் மேல் அமைக்கப்பட்டுள்ளது. அதனுடைய கோபுரம் இரும்பினால் செய்யப்பட்டு, 285 அடி உயர்ந்து நிற்கின்றது. கோபுரத்திற்கு மேலே சுதந்திர தேவதையின் உருவச் சிலை. அழகிய சூழ்நிலை

யில் 120 ஏகரா நிலப் பரப்பில் இதைச் சார்ந்த கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பகுதியில் மக்கள் பிரதிநிதி சபை கூடுகின்றது. இன்னொரு பகுதியில் மேல் சபை கூடுகின்றது.

வாஷிங்டனுக்குச் செல்லுகின்றவர்கள் இந்தக் கட்டடத்தைத் தான் முதன் முதலில் சென்று பார்க்கிறார்கள். கட்டடத்திற்குள் சென்று பார்த்தால் வரிசையாகப் பல உருவச்சிலைகள் காட்சி அளிக்கின்றன. ஒவ்வொரு ராஜ்யத்திலிருந்தும் ஒரு முக்கிய தலைவரின் உருவச்சிலை அங்கு வைக்கப்பட்டுள்ளது. சுவர்களிலே வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பல நிகழ்ச்சிகள் சித்தரித்துக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

நான் அங்கே சென்றிருந்த போது மக்கள் பிரதிநிதி சபை நடந்து கொண்டிருந்தது. சட்ட சபை நடைபெறுவதைப் பார்க்காமல் வர முடியுமா என்ன? அங்கு சென்று நடவடிக்கைகளைச் சிறிது நேரம் கவனித்தேன். எனக்குப் பெரிய ஏமாற்றம். ஒரு ஒழுங்கும் அமைதியும் இருப்பதாகவே தோன்றவில்லை. நம்முடைய சட்ட சபைகளில் ஒரு சமயத்தில் ஒருவருக்கு மேல் பேசக்கூடாது. இன்னொருவர் குறுக்கிட விரும்பி எழுந்திருந்தால், பேசிக்கொண்டிருக்கும் அங்கத்தினர் உட்கார்ந்தால்தான் மற்றவர் பேச முடியும். இந்த வழக்கம் அங்கு இல்லைபோல் தோன்றுகிறது. ஏக காலத்தில் பல அங்கத்தினர்கள் நின்று கொண்டிருப்பதையும், பேசிக் கொண்டிருப்பதையும் கண்டேன். அங்கத்தினர்கள் மட்டுமல்ல, அங்கிருக்கின்ற பணியாட்களும்கூட சபைக்குள்ளேயே கூட்டமாகக் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். நம்முடைய சட்ட சபைகளிலே இன்னொரு முக்கியமான விதி, சபாநாயகர் எழுந்து நின்றால், மற்ற அங்கத்தினர்கள் எல்லோரும் உட்கார்ந்துவிட வேண்டும்; பேசக் கூடாது. அப்படியொரு விதி அங்கில்லையோ, அல்லது மதிப்பு இல்லையோ தெரியவில்லை. அக்கிராசனரும் நின்று பேச முயற்சிக்கிறார். பல அங்கத்தினர்களும் நின்றுகொண்டு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். சாதாரண இடங்களிலே வாக்குவாதம் நடைபெறுவதைப் போலத்தான் தோன்றியது.

என்னுடன் வந்திருந்த திருகாக்ரன் அவர்களிடம் என்னுடைய ஏமாற்றத்தைத் தெரிவித்தேன். பொது மக்களுக்குக்கூட இதைப் போன்ற சபைகளில் நிறைவேற்றப்படும் சட்ட விதிகளின் பேரிலே மதிப்பு ஏற்படுமா என்ற கேள்வியைப் போட்டேன். அவரும் இந்த உண்மையை ஒப்புக் கொண்டார். ஆனால் அமெரிக்க சட்ட சபைகள் இயங்கும் முறையை எனக்கு விளக்கிக் கூறினார்.

பெரும்பாலும் முக்கியமான விஷயங்கள் கமிட்டிகளிலே விவாதிக்கப்பட்டு, அங்கேயே முடிவுகள் ஏற்பட்டு விடுகின்றன. இதற்கெனப் பல கமிட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. மக்கள் பிரதிநிதி சபை கமிட்டிகளும் உள்ளன. இவற்றிலே விரிவாக விவாதம் நடைபெறுகின்றது. நிபுணர்களைக் கூப்பிட்டு விசாரித்து விஷயங்களின் நுட்பங்களை அறிந்து கொள்ள முயலுகிறார்கள். ஜனாதிபதியின் காரியதரிசிகள் இந்தக் கமிட்டிகளின் முன்பு வந்து தங்களுடைய கருத்துக்களை விளக்குகிறார்கள். ஆகவே, உண்மையில் அமெரிக்காவின் சட்ட சபை நடவடிக்கைகளெல்லாம் கமிட்டி நடவடிக்கைகளாகத்தான் இருக்கின்றன என்று விளக்கம் கூறினார்.

இந்தக் கமிட்டியின் நடவடிக்கையைக் காண விரும்பினேன். ஆனால் அப்போது எக்கமிட்டியும் நடைபெறவில்லை. எனவே அந்த அனுபவத்தைப் பெறும் வாய்ப்பில்லாமலே போய்விட்டது.

அமெரிக்கக் கமிட்டி அமைப்புகள் பற்றி நூல்களில் நான் படித்திருக்கிறேன். சில முக்கியமான கமிட்டி நடவடிக்கைகளைப் பற்றியும் படித்திருக்கிறேன். கமிட்டிகளைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் விவாதித்து சிறந்த ஆலோசனையின் பேரில்தான் முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பதை அவற்றின் மூலம் நாம் தெரிந்துகொள்ள முடிகிறது.

கேபிடல் கட்டடத்திற்குக் கிழக்குப் புறமாக அமைந்திருக்கிறது அமெரிக்காவின் சுப்ரீம் கோர்ட். இது 1935-ல் தான் கட்டி முடிக்கப்பட்டது. பளபளப்பான வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்ட கட்டடம். அதனுடைய நுழை வாயிலும், உள்ளே கட்டட அமைப்பும் எவருடைய மனத்தையும் எளிதில் கவரக் கூடியதுதான். பொது மக்களும் கோர்ட் நடவடிக்கைகளைக் கவனிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது வாஷிங்டன் நகரிலேயே மிக அழகான கட்டடமாகக் கருதப் படுகிறது.

சுப்ரீம் கோர்ட்டுக்குத் தென் புறமாக அமைந்திருப்பது காங்கிரஸ் நூல் நிலையம். இரு பெரும் கட்டடங்களில் இந் நூல் நிலையம் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. அறுபது லட்சம் நூல்கள் இந்நிலையத்தில் இன்று இருக்கின்றன. இது ஒரு தேசிய நூல் நிலையமாக விளங்குகிறது. பல பழம் புத்தகங்களும் தஸ்தாவேஜுகளும் இங்குக் காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானது சுதந்திரப் பிரகடனத்தின் மூலம்.

—“ஆனந்தவிகடன்”

அனைவரும் அழகாய் இருக்கலாம்

[எல். இ. ஸிம்ஸன், எம். டி.]

உண்மையான அழகுக்கு அடிப்படை உடல் நலமும் மனத் தூய்மையுமே. இவற்றின் வெளி அடையாளம் அழகு. இது தற்செயலாய் அமையும் ஒரு காரியம் அன்று; அல்லது வேண்டும் போது போர்த்துக்கொள்ளக் கூடிய ஒரு போர்வையும் அன்று.

அழகில்லாதவர்கள் எவருமே இல்லை என்று சொல்லிவிடலாம். மூஞ்சைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறாளே, அதோ, அப் பெண், அவளுடைய சருமம் மஞ்சள் பூத்தாற் போல் இருக்கிறது. கண்களுக்குக் கீழே கரு வளையங்கள் காணப்படுகின்றன. அவள் என்ன செய்யலாம் என்று கேட்கிறீர்களா? என்ன செய்யக் கூடாது என்பதை முதலாவது சொல்லிவிடுகிறேன். ஸ்நோ, கிரீம் முதலியவற்றை அவள் உபயோகிக்கக் கூடாது. சகல முக தோஷங்களையும் நீக்கி, சருமத்தை வெண்மையாக்கும் சக்தியுள்ளதென்று அவை விளம்பரப் படுத்தப்படலாம். எனினும் அவற்றை உபயோகிக்காமல் இருப்பது நலம். அவள் தன் முகத்தை நன்றாக அலம்பிச் சுத்தப்படுத்த வேண்டும். இரத்த ஓட்டம் சுறுசுறுப்பாக இருப்பதற்கான வழி வகைகளை வகுக்க வேண்டும். உணவு, உடற்பயிற்சி, உறக்கம் இவையே உள்ள குறைகளை விலக்கி, உண்மை அழகைக் கொடுக்கக் கூடியவை சொல்லப் போனால், இவை தாமும் போதா. மனநிறைவும் பொங்கும் மகிழ்ச்சியும் கூட வேண்டும். அதிருப்தி முகக் களையைக் கெடுத்துவிடும்; உதடுகளைக் கீழே சரிய வைத்து, கண் ஒளியை மங்கச் செய்து விடும்!

ஒரு பெண்ணின் முகம் பார்க்கக் கவர்ச்சியற்றதாக இருக்குமானால், அதற்குக் காரணம் அவளே தான். வாழ்க்கையில் தெம்பில்லாதவர்கள், விளையாட்டிலும், வேலையிலும் உற்சாக மற்றவர்கள் ஒருபோதும் வசீகரமாக இருக்க முடியாது. உடல் வலு அழகுக்கு ஒரு அறிகுறி. கண்ணின் நிறம் அல்லது தலை மயிரின் நிறம் எப்படி இருந்தாலும் பரவாயில்லை சூரிய வெளிச்சம், காய்கறி கனி வர்க்க உணவு, பிறர் நலம் பேணல், நன்றியுணர்வு, அன்பு இவை யாவுமே ஆரோக்கியத்திற்குக் காரணமாக விளங்குகின்றன. வாழ்க்கையில் தகுதியுள்ள குறிக்கோளை நோக்கி முன்னேறிக்கொண்டே இருக்க வேண்டும் இதுவும் தவிர, நாம் நம் மனத்தை எப்பொழுதும் சுறுசுறுப்பாக வைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

கோபம், கவலை, ஆத்திரம், குற்ற உணர்ச்சி, தன் நலம்,

மாறாத் துயரம், பெருந்தீனி — இவைகளையும் அழகின் விரோதிகளின் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அளவுக்கு மிஞ்சின உணவு உடலின் வலுவைக் குறைத்துவிடும். உலகத்தில் அனேகர் போதுமான உணவு கிடைக்காமல் திண்டாடுகிறார்கள்; ஏறக்குறைய அதே எண்ணிக்கையுள்ள மற்றவர்கள் மீதுணவு காரணமாக நோயுற்று அவதிப்பட்டுக்கொண்டு கிடக்கிறார்களாம்!

மாணவி பார்வதி இளம் பிராயத்தில் மிகவும் அழகாகத்தான் இருந்தாள். ஆனால் கடந்த ஓர் ஆண்டில் அவளுடைய கவர்ச்சி குன்றி வருகிறது; அவள் கண் ஒளி மங்குகிறது. அவள் ஒரு நாளில் என்ன என்ன காரியங்கள் செய்கிறாள் என்று பார்ப்போமா? ஒருவேளை அவளுடைய அந்தக் கேட்டிற்குக் காரணம் இங்கே இருந்தாலும் இருக்கலாம். காலை எழுந்தவுடன், சில நிமிடங்களை இறை வழிபாட்டில் செலவிடுகிறாள். வகுப்பில் முதலாவதாக இருக்க வேண்டும் என்று அவளுக்கு நிறைய ஆசை. அன்றைக்குப் படிக்க வேண்டிய பாடங்களை அவசரம் அவசரமாக ஒரு முறை பார்த்து வைத்துக் கொள்கிறாள். "ஐயோ, மணி ஆயிற்றே!" என்று அலறிக் கொண்டே, காலை உணவு சாப்பிடுகிறாள். ஒன்று, இரண்டாய் வாயில் போட்டுக்கொண்டு, கல்லூரிக்குப் போகத் தயாராகுகிறாள். வகுப்பில் பேராசிரியர் சொல்வதில் ஒன்றைக்கூட விட்டுவிடக் கூடாதென்ற எண்ணத்துடன், அவர் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் தனது நோட்டில் உடனுக்குடன் எழுதிக் கொள்கிறாள். பிறகு சோதனை அறையில் இரண்டு மணி நேரம் சோதனைகள் செய்யவேண்டும். நடுப்பகல் உணவுக்கு வீடு திரும்புகிறாள். இன்னும் மேசையின் மீது சாப்பாடு வைக்கப்படவில்லை; எனவே நேரத்தை வீணாக்காமல், புத்தகத்தை எடுத்து, இரண்டு மூன்று பக்கங்கள் படிக்கிறாள். ஒருவாறாக மதிய உணவை முடித்து விட்டு, கல்லூரிக்குச் செல்லுகிறாள். பின்பு முழு நேரம் படிப்பு. இரவில் வீடு திரும்பியவுடன், மறுபடியும் படிப்பு ஆரம்பமாகிவிடுகிறது. சனிக்கிழமை இரவு அவளை விருந்துக்கு அழைத்தாள் அவளுடைய சினேகிதி. ஆனால் அடுத்த வாரம் பரீட்சை என்ற காரணத்தால் பார்வதி அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்படியே ஒவ்வொரு நாளும் இயந்திரமாக உழைத்தாள். பின்னே ஏன் அவள் சருமம் மஞ்சள் பூக்காது? ஏன் கண் ஒளி மங்காது? நீங்களே யோசித்துப் பாருங்கள்.

ஒரு நாள் சாயங்காலம் வலுக்கட்டாயமாக அவளுடைய சினேகிதிகள் அவளை உல்லாச சைக்கிள் சவாரிக்காகக் கூட்டிச் சென்றார்கள். அவளுக்குச் சைக்கிள் சவாரி என்றால் பிரியம் தான். நாலு மைல் சென்றதும், ஓர்

இடத்தில் இறங்கி, சிறிது சிற்றுண்டி அருந்தினார்கள். பின்பு திரும்பி வந்தார்கள். சரிவான பாதை தான் வீடு வந்து சேரும் மட்டும். ஆகையால் அவளுக்கு அதிகக் கஷ்டமில்லை. மேலும் சாயங்காலம் மிகவும் குளிர்ச்சியாக இருந்தது. அச்சமயத்தில் இப்படிப்பட்ட உடற்பயிற்சி செய்வது அவளுக்கு இன்பத்தையே கொடுத்தது. ஆகவே அவள் உடம்பில், மேனியில் ஒரு புதிய மாறுதல் தோன்றியது; களைப்பு மறைந்தது; தெம்பு பிறந்தது. கண்கள் பிரகாசமாக இருந்தன. ஒரே விதமான காரியங்களையே திரும்பத் திரும்பச் செய்துகொண்டிராமல், இப்படி வேலைக்கு வேலை புதுமை புகுத்தல் எவ்வளவு நன்மை உண்டாக்குகிறது என்பதை அவள் அன்று உணர்ந்தாள்.

உண்மை அழகின் ஒரு அம்சம் என்ன தெரியுமா? உடலின் உறுப்புகளும், அவ்வுறுப்புகளின் பகுதிகளும் ஒன்றுக்கொன்று பொருத்தமான விகிதத்தில் அமைந்திருக்க வேண்டும். தேகப் பயிற்சியின் மூலமாய் இதை உண்டாக்கலாம். ஒன்றிரண்டு தசைநார்கள் பொருத்தமாக அமைந்துவிட்டால் மாத்திரம் போதாது. எல்லாத் தசைகளுமே ஒன்றுடன் ஒன்று நன்கு பொருந்தியிருக்க வேண்டும். உலாவி வருதல், ஓடுதல், தோட்டத்தில் வேலை செய்தல், நீந்துதல், சைக்கிள் சவாரி இவை யாவும் தசைகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து, அழகு பெறச் செய்யும் சாதனங்களே!

அழகின் விரோதிகள் எவை என்று முன்னமே குறிப்பிட்டேன். கோபம், பயம், தொல்லை, கவலை, எரிச்சல், துக்கம், பொறாமை, குரோதம் இவைகளே. ஒரு பெண் அழகாய் இருக்க வேண்டும் என்று விரும்பினால், அமைதி, அன்பு, மகிழ்ச்சி முதலிய நற்பண்புகளை அவள் தன்னிடம் விருத்தி செய்து கொள்ள வேண்டும். கெடுதி விளைக்கும் மனப் பழக்கங்களை விட்டொழிக்க வேண்டும். இப்படிச் செய்யாமல், வேறு பிரயத்தனங்கள் மட்டும் எடுப்பதால் அதிகப் பயன் இல்லை.

சரோஜினி அழகுடன் பிறக்கவில்லை. எனினும் அயலார் தங்கள் இல்லங்களில் நடக்கும் விசேஷங்களுக்கும் விருந்துகளுக்கும் அவளை மிகவும் விரும்பி அழைப்பது வழக்கம். அவளைக் காட்டிலும் முக வசீகரமுள்ள பல பெண்கள் அப் பகுதியில் இருந்தார்கள். ஆனாலும் சரோஜினிக்குத் தான் அழைப்புகள் எல்லாம் வரும். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அவள் தன்னைப் பிறர் விரும்பத்தக்க ஒரு விருந்தாளியாக ஆக்கிக் கொண்டாள். இதுதான் இரகசியம். சம்பாஷணை அவள் கையில் ஒரு கலையாக அமைந்திருந்தது. விருந்து வீடுகளில் சமயாசமயம் ஏற்படும் சிறு சிறு தொல்லைகளில் அவ் வீட்டினருக்கு உதவி செய்ய

சரோஜினிக்குத் தெரியும். விருந்தாளிகளில் யாராவது "கொய்" என்று ஒரு மூலையில் என்ன செய்வதென்று தெரியாமல் உட்கார்ந்திருந்தால், வலிய அவர்களிடம் சென்று, பேச்சுத் தொடுப்பாள். கடைசியில் அவள் ஒரு பணக்கார மாப்பிள்ளையைக் கலியாணம் செய்துகொண்டாள்.

உங்களைப் போல் ஒருவரும் இதற்கு முன் இருந்ததுமில்லை; இனி இருக்கப் போவதுமில்லை. எனவே நீங்கள் வேறு யாரைப் போலவும் இருக்க வேண்டுமென்று பிரயாசைப்பட வேண்டியதே இல்லை; உங்கள் தனித்தன்மையை வளர விடுங்கள். கடவுள் உங்களைப் பிரத்தியேகமாகவே சிருஷ்டித்திருக்கிறார். எனவே பிரத்தியேகமாக இருங்கள்.

பலர் தங்கள் உள்ளத்தில் இருக்கும் மாசைப் பற்றிக் கவலை கொள்ளாமல், தங்கள் முகப்பருக்களைப்பற்றியோ, மச்சங்களைப் பற்றியோ அதிகக் கவலை கொள்கிறார்கள். மனத்தின் மாசு பிறர் கண்களில் படாது என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். இது தவறு. அது இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்கு முகத்தில் தோன்றும்.

—'நல்வழி'

" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்.

94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு
அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடெண்ட் பண்டு
கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச்
சேர்க்கும் விண்ணப்பத்
தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-25

வருடாந்திர பிராவிடண்ட்
பண்டு சரிபார்த்தனுப்பும்
பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income

வருமான நற்சாட்சிப்
பாரங்கள்
(ஆங்கிலம்) 10 ரூ. 2-50.

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு :

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

கல்லணை

[நா. பத்மநாபன்.]

மக்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையானது உணவு. உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் பயிர் வகைகள் செழித்து வளர அவசியமானது நீர். ஆகவே, உணவைப் பெருக்கி ஒரு நாட்டை வளப்படுத்தத் தேவையானவை நீரும் நிலமும் ஆகும்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை நிலம் மட்டும் இருந்து, அதன் விளைச்சலுக்காக மழையை எதிர் நோக்கி வாழ வேண்டியதிருந்தால் அந்த நிலத்தினால் யாதொரு பயனுமில்லை. ஏனெனில், உரிய காலங்களில் மழை பெய்யத் தவறினால், செழுமையாக இருக்க வேண்டிய நிலம் வறண்டுபோகும். அதன் விளைவாக நாட்டில் நிலவுவது பஞ்சமும் பசிப் பிணியும் தான்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, பஞ்சமும பசியும் என்றும் நம் நாட்டை அணுகாதிருக்க வேண்டுமானால், நாம் நீரைத் தேக்கி வைத்து நீர்ப்பாசனத்துக்குப்பயன்படுத்த வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். இதையே சங்க கால நூலாகிய புறநானூறும் "நிலத்தையும் நீரையும் ஒன்று சேர வைப்பவர்கள் உடம்பையும் உயிரையும் ஒன்று சேர்ப்பவர் ஆகிறார்கள்" என்ற கருத்துப்பட விளக்குகின்றது.

தற்கால விஞ்ஞான வசதியும், இயந்திர சாதனங்களும் இல்லாமலிருந்த அந்தக் காலத்திலேயே, நம் முன்னோர்கள், நீர்ப்பாசனத் திட்டங்களில், பிரமிக்கத் தக்க முறையில் திறமையும் தேர்ச்சியும் பெற்றிருந்தார்கள். இதற்குத் தக்க சான்றுகள், இன்று தமிழ் நாட்டில் பற்பல இடங்களில் காணப்படும் ஏரிகளும் அணைக்கட்டுகளும் ஆகும்.

அவைகளில் ஒன்று, இன்று மேல் நாட்டவரும் கண்டு வியந்து போற்றும் கல்லணை. இது திருச்சிராப்பள்ளி நகருக்கு வடபக்கம், சுமார் 10 மைல் தொலைவில், காவிரி நதியின குறுக்காகக் கட்டப்பட்டுள்ளது. இதன் நீளம் கிட்டத் தட்ட 1100 அடி அகலம் 60 அடி. சங்க இலக்கியங்களால் போற்றிப் புகழப்படும் கரிகால் சோழ மன்னரே இந்த அணையைக் கட்டி முடித்துக் காவிரியின் நீரை முதன் முதலாகப் பூரணமாகப் பயன்படுத்தி, 'சோழ வளநாடு சோறுடைத்து" என்னும் பெருமையைத் தன் நாட்டுக்கு உண்டாக்கியவர் எனக் கருதப்படுகிறது. இந்த அணைக்கட்டும் அன்று போல் இன்று வரை தன் நீர்த்தேக்கத்தின்

மூலம் தஞ்சை ஜில்லாவையும் அதன் சுற்றுப்புறங்களையும் செழுமைப் படுத்துவது மட்டுமல்லாமல், அந்த ஜில்லாவுக்கே "தென்னிந்தியாவின் களஞ்சியம்" என்ற புகழ்மாலையையும் சூட்டியிருக்கிறது. இதை ஆங்கிலத்தில் 'கிராண்ட் அணைக்கட்' (மகத்தான அணைக்கட்டு) என்று அழைக்கிறார்கள்.

நம் நாட்டின் பழம்பெரும் கட்டிடக் கலையின் சிறப்பை யாவரும் கண்டு மகிழ்வதற்காக, நம் அரசாங்கத்தார் இந்த அணைக் கட்டின்மேல், வனப்பு மிகுந்த பூங்காக்களையும்கண் கவர் சிலைகளையும், நீராடுவதற்கு வசதியான நீரோடைகளையும் அமைத்து, உல்லாசப் பிரயாணிகளுக்கு உகந்த இடமாகச் செய்திருக்கிறார்கள்.

காவிரி, இந்தியாவிலுள்ள ஏழு புண்ணிய நதிகளில் ஒன்று. இது "தென் கங்கை" எனவும் "தட்சிண கங்கை" எனவும் அழைக்கப்படுகிறது. ஆயினும், கங்கை நதிக்கு இல்லாத ஒரு தனிப் பெருமை இதற்கு உண்டு. பாவம் செய்தவர்கள் தன்னிடத்தில் நீராடுவதால் தனக்கு ஏற்பட்ட பாவத்தைப் போக்கிக் கொள்வதற்காக, கங்கை நதியானது பூமியின் அடி வழியாக வந்து, காவிரி நதி உற்பத்தியாகும் இடத்தில் ஆண்டுக்கு ஒரு முறை அதாவது துலா மாதத்தில் (அக்டோபர்–நவம்பர்) நீராடிப் புனிதமடைகிறது என்பது ஐதீகம். மேலும் இந்நதி "காவிரிப் பாவை," "சோழர் குலக்கொடி," "தமிழ்ப் பாவை" என்ற காவியப் பெருமைகளையும உடையது. இந் நதி, கி பி. 50–ல் இந்நாட்டிற்கு வந்த கிரேக்க யாத்ரிகர் தாலமியினால் "எக்ஸாப் போஸ்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வங்காள விரிகுடாக்கடலில் சங்கமமாகும் இடத்திலேயே முன்னர் சோழர் தலைநகரமாகவும் சிறந்த வாணிப கேந்திரமாகவும் விளங்கிய பூம்புகார் என்று புகழப்பட்ட-காவிரிப் பூம்பட்டினம் இருந்ததாகவும், பின்னர் இந்நகர் கடல் கொள்ளப் பட்டதாகவும் சரித்திரக் குறிப்புகள் காணப்படுகின்றன.

சிறந்த ராஜரிஷியும் யோக சிரேஷ்டருமான கவேரர் பிரம்மாவைக் குறித்துக் கடுந்தவமியற்றி விஷ்ணு மாயையைத் தன் புத்திரியாகப் பெற்று முக்தியடைந்தார். பின்னர், விஷ்ணு மாயை பிரம்மாவின் கட்டளைப் படி, அகஸ்திய முனிவரின் கமண்டலத்தில் புனித நீராக உருக் கொண்டிருந்தாள். சிவபிரான் கட்டளைப்படி, அகஸ்திய முனிவர் பொதிகை மலைக்குப் புறப்பட்டு வரும்பொழுது, குடகு மலையில் சிறிது காலம் தங்கித் தவம் செய்ய வேண்டிய தாயிற்று. அப்பொழுது காந்தமன் என்னும் சோழ வேந்தன், தன் நாடு செழிப்புற வேண்டுமென விநாயகப் பெருமானை வேண்ட, அவரும் காக்கை உருக் கொண்டு அகஸ்திய முனிவரின்

கமண்டல நீரைக் கவிழ்த்து காவிரி நதி அங்கேயே தோன்றச் செய்தார் என்று கூறப்படுகிறது. இதையே பழம்பெரும் இலக்கிய மான மணிமேகலையும்

"கஞ்சவேட்கையிற் காந்தமன் வேண்ட
அமரமுனிவனகத்தியன் றனது
கரகங்கவிழ்த்த காவிரிப்பாவை"

எனக் கூறுகிறது.

இந்த வரலாற்றை விளக்குவ தற்காகக் கல்லணையில் அமைக் கப்பெற்றிருக்கும் அகஸ்தியர் தவக்கோலத்தையும், காகம் கமண்டல நீரைக் கவிழ்க்கும் தோற்றத்தையும் காட்டும் சிலா வடிவமும், பின்னர் "நீ செல்லு மிடமெல்லாம் செழித்தோங் குக" என ஆசீர்வதிக்கும் முனி வரின் சிலையும், "வற்றாத நீர் சுரந்து வளமை மிகச் செய் வேன்" என்ற பாவனையில் கையில் அமுதக் குடமேந்தி நீர் சொரியும் காவிரி அம்மன் சிலை யும் நம்மைப் பரவச மூட்ட வல்லவை. 'பண்டைத் தமிழரின் பெருமையை நீர் காணீர்' என்று கூறுவது போல், யானை மீது அமர்ந்துள்ள கரிகால் பெருவள வனின் கம்பீரத் தோற்றமும், "உழவுக்கும் தொழிலுக்கும் பெருமை மிகவுண்டு" என உணர்த்தும் உழவர், செம்படவர் உருவங்களும், என்றும் நம் மனத்தை விட்டு அகல மாட்டா. இவை மட்டுமன்றி, பூங்காவின் மத்தியில் யாவரையும் வரவேற் கும் முறையில் அமைந்துள்ள சோழர் தம் கலைக்கன்னியும், "காணும் எழிலெல்லாம் என தே" எனச் சொல்லாமல் சொல் லும் குழலும் கண்ணபிரானும் பார்த்து மகிழ வேண்டிய அரு மையான கலா வடிவங்கள். அணைக்கட்டின் மீது சிறிது தூரம் தெற்கு நோக்கிச் சென்றால், ஒரு தென்னை மரத்திலே ஒன் பது கிளைகள் தோன்றி, ஒவ் வொரு கிளையிலும் காய்கள் குலை குலையாய்க் காய்த்துத் தொங்கும் இயற்கையின் அதிசயத்தைக் கண்டு களிக்கலாம்.

காவிரி புண்ணிய நதி என்ப தற்கு ஏற்ப, காவிரி பாயுமிடங்க ளெல்லாம் புண்ணிய ஸ்தலங்கள். அணைக்கட்டிலிருந்து சமீப தொலைவிலேயே இந்தியாவின் இருபெரும் புகழ் பெற்ற கோயில் களான ஸ்ரீரங்கமும், திருவானைக் காவலும் அமைந்திருக்கின்றன. சற்றுத் தொலைவில் காணப்படு வது பிரசித்திபெற்ற சமயபுரத்து மாரியம்மன் ஆலயம். இவ்வளவு தூரம் வந்த நாம் அங்கும் சென்று, ஆண்டவனையும், அன்னை சக்தியையும் வணங்கி மன நிறை வுடன் திரும்பலாமே.

—"தினமணி"

செகண்டரி கல்விச் சீரமைப்பு

தலைமை ஆசிரியர்கள் வகுத்துள்ள திட்டம்

கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் செகண்டரி கல்வித் திட்டத்தைச் சீரமைக்கச் சென்னை தலைமை ஆசிரியர்கள் மாநாடு ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது.

சென்னை புரொக்ரஸிவ் யூனியன் ஹைஸ்கூல் கௌரவக் காரியதரிசி அத்திட்டம் பற்றி எழுதுவதாவது:

சமீபத்தில் ஸெகண்டரி கல்வி சீரமைக்கப்பட்டபோது, தரத்தை உயர்த்திப் பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டன. பல்வேறு பாடங்களில் உள்ள விஷயங்களை 10 ஆண்டுக் காலத்தில் பூர்த்தி செய்யும் வகை செய்யப்பட்டது. ஒரு வருடத்தில் வகுப்பு நடக்கும் தினங்கள் 180-லிருந்து 200 ஆக உயர்த்தப்பட்டன. 11-வது ஆண்டில் போதிக்கப்பட வேண்டிய பாட விஷயம் பி. யு. ஸி. தரத்தில் இருக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. ஆனால், பின்னர் ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர்களும் வகுப்பு நடக்கும் நாட்கள் அதிகரிக்கப்பட்டிருப்பினும், பாடங்கள் ரொம்ப அதிகமாக இருக்கிறது என்பதையும், சில பாடங்கள் மாணவர்களின் புரிந்துகொள்ளும் சக்தியை மீறியவையாக இருக்கின்றன என்பதையும் கண்டறிந்தனர். செகண்டரி கல்வி படிப்புக் காலம் 11 ஆண்டுகளாக இருக்க வேண்டும் என யாவரும் விரும்பினார்கள்.

குறிப்பாக விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களின் தரம் உயர்வாக இருக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் கருதியதால், அநாவசியமான இனங்களையும், ஒரு பாடத்தில் வரும் விஷயமே இன்னொரு பாடத்தில் வருவதைத் தவிர்த்தும் பளுவைக் குறைக்கலாம் என யோசனை கூறினார்கள். 9, 10, 11-வது ஸ்டாண்டர்டுகளில் மாணவர்கள் (முன்போல) தங்களுக்கு இஷ்டபூர்வமான பாடத்தை எடுத்துக்கொண்டு படிக்க வசதி செய்யலாம். இப்படிச் செய்தால் மாணவர்கள் சில விசேஷ பாடங்களில் தீவிரக் கவனம் செலுத்திப் படிக்க வாய்ப்பு ஏற்படும் என்று அவர்கள் கூறினர். எல்லாப் பாடங்களிலும் ஏக காலத்தில் பரீட்சை எழுதும் சிரமத்தைத் தவிர்ப்பதற்காக சில பாடங்களில் 10-வது ஸ்டாண்டர்டு படிப்பு முடிவிலும் மற்ற பாடங்களில் 11-ம் ஸ்டாண்டர்டு படிப்பு இறுதியிலும் பரீட்சைகள் நடத்தலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டது.

மொழிகள் சம்பந்தமாக ஆங்கில மொழி அறிவின் தரத்தை உயர்த்துவதற்காக 3-வது ஸ்டாண்டர்டிலேயே ஆங்கில போதனை

ஆரம்பிக்கலாம் என்றும் 8-வது ஸ்டாண்டர்டில் அம்மொழிப் போதனையைப் பயிற்சிபெற்ற பட்டதாரிகளிடம்விட வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டது. எல்லா இலக்கிய மொழிகளுக்கும் தாய் போல இருப்பதும், நமது கலாசாரம், நாகரிகத்தின் பரம்பரை சொத்தாக இருப்பதுமான சம்ஸ்கிருதத்துக்கு நமது பாடத் திட்டத்தில் உரிய இடம் அளிக்கப்பட வேண்டும். சம்ஸ்கிருதம் படிக்க விரும்புவோருக்கு அதற்கான எல்லா வசதிகளும் அளிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டது.

1948-ம் வருஷத்திய திட்டத்தில் இருந்தது போல, 6-வது ஸ்டாண்டர்டிலிருந்து 8-வது ஸ்டாண்டர்டு முடிய பிராந்திய மொழிகட்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏழு பீரியடுகளில் 4 பீரியடுகளை எல்லாப் பையன்களும் பிராந்திய மொழியைப் பொதுவான முறையில் படிக்க ஒதுக்கலாம். பாக்கி மூன்று பீரியடுகளைப் பிராந்திய மொழிகளின் தீவிரமாகப் படிக்கவோ, அல்லது புராதன அல்லது தற்கால இந்திய மொழியைப் படிப்பதற்கு ஒதுக்கலாம். ஹிந்தி படிப்பதற்கு ஊக்க மளிக்கப்பட வேண்டும் என்றும், 6-வது ஸ்டாண்டர்டில் ஆரம்பித்து 8-வது ஸ்டாண்டர்டு முடிய ஹிந்தி படிக்க மீண்டும் வசதி செய்யலாம் என்றும் யோசனை கூறப்பட்டது.

ஆரம்பப் பள்ளிகள், செகண்டரி பள்ளிகள் இரண்டிலும் பாடத்திட்டங்கள் ஒரே மாதிரி இருக்க வேண்டுமென்பதற்காக ஒரே மாதிரியான இணைந்த பாடத் திட்டத்தைப் பின்பற்றலாம் என்று சிபாரிசு செய்யப்படுகிறது.

பொதுவான சீரமைப்புத் திட்டம் பின்வருமாறு:

1, 2-வது ஸ்டாண்டர்டு

பிராந்திய மொழி 10 பீரியடுகள், கணக்கு 7 பீரியடுகள், பொது அறிவு 8 பீரியடுகள் (இயற்கைப் பாடம், தோட்டக் கலை, ஒழுக்க போதனை உட்பட) பெரியார்களின் வரலாறுகள், விளையாட்டுகள் 10 பீரியடுகள் (உடற் பயிற்சி, படம் வரைவது, மண் பொம்மைகள் செய்வது முதலியவை இதில் சேரும்.)

3-வது ஸ்டாண்டர்டு

பிராந்திய மொழி 10 பீரியடுகள், ஆங்கிலம் 5 பீரியடுகள் (சம்பாஷணை மட்டும்) கணக்கு 8 பீரியடுகள், பொது அறிவு 7 பீரியடுகள் (இயற்கைப் பாடம், அந்த ஸ்தலத்தின் பூமி அமைப்பு விவரங்கள், பெரியோர்களின் வரலாறுகள், ஒழுக்கம் பற்றிய கதைகள்), விளையாட்டுகள், கைத்தொழில்கள் 7 பீரியடுகள்.

4-வது ஸ்டாண்டர்டு

பிராந்திய மொழி 10 பீரியடுகள், ஆங்கிலம் 5 பீரியடுகள், கணிதம் 6 பீரியடுகள், பொது அறிவு 7 பீரியடுகள், (ஜில்லாவைப் பற்றிய விவரங்கள், பெரி

யார்களின் வரலாறுகள், முனிசி பாலிடி, பஞ்சாயத்து இயற்கைப் பாடம்), விளையாட்டுகள் கைத் தொழில்கள் 7 பீரியடுகள்.

5-வது ஸ்டாண்டர்டு

பிராந்திய மொழி 8 பீரியடு கள், ஆங்கிலம் 6 பீரியடுகள்; கணிதம் 6 பீரியடுகள்; விஞ்ஞா னம் 4 பீரியடுகள்; சரித்திரம், பூகோளம், சிவிக்ஸ் 4 பீரியடுகள் (இந்திய சரித்திரம், சென்னை ராஜ்யத்தின் அமைப்பு பற்றிய விவரங்கள், ராஜ்யம் சம்பந்தமாக ஒருவர் வசிக்கும் இடத்தில் அவ ருக்கு என்னென்ன கடமைகள் இருக்கின்றன என்பது பற்றிய (ஸிவிக்ஸ்) போதனை); விளை யாட்டுகள், கைத்தொழில்கள் 6 பீரியடுகள்; ஒழுக்க போதனை ஒரு பீரியடு.

6, 7, 8-வது ஸ்டாண்டர்டு கள்

பிராந்திய மொழி 7 பீரியடு கள் (4 பீரியடுகள் பொது, 3 பீரியடுகள் தீவிரப் படிப்பு); ஹிந்தி 2 பீரியடுகள், இங்கிலீஷ் 6 பீரியடுகள்; கணிதம் 5 பீரியடு கள்; விஞ்ஞானம் 4 பீரியடுகள்; சரித்திரம், பூகோளம், ஸிவிக்ஸ் 4 பீரியடுகள்; தேகப்பயிற்சிக் கலைகள், கைத்தொழில்கள் 6 பீரியடுகள்; ஒழுக்க போதனை ஒரு பீரியடு.

9, 10-வதுஸ்டாண்டர்டுகள்

பிராந்திய மொழி 6 பீரியடு கள், இங்கிலீஷ் 6 பீரியடுகள்.

அடிப்படைப் பாடங்கள்: பொது கணிதம் 3 பீரியடுகள்; பொதுவிஞ்ஞானம் 3பீரியடுகள்; சரித்திரம், பூகோளம் 3 பீரியடு கள். இஷ்ட பாடங்கள் (2) 8 பீரியடுகள்; தேகப்பயிற்சி, கலை கள், கைத்தொழில்கள் 5 பீரியடு கள்; ஒழுக்க போதனை ஒரு பீரி யடு.

குறிப்பு: (1) 10-வது ஸ்டா ண்டர்டு கடைசியில் பொது கணி தம், பொது விஞ்ஞானம், சரித் திரம், பூகோளம் ஆகியவற்றில் பொதுப் பரீட்சை நடத்த வேண் டும். இதில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் 11-வது ஸ்டாண் டர்டில் படித்துக் கொண்டே அடுத்த பரீட்சைக்கு ஆஜராக லாம்.

(2) இஷ்ட பாடங்களின் போதனை ஆங்கிலம் அல்லது பிராந்தியமொழியில் இருக்க வேண்டும். மற்ற பாடங்களின் போதனை பிராந்திய மொழியில் தான் இருக்கவேண்டும்.

11-வது ஸ்டாண்டர்டு

பிராந்திய மொழி 7 பீரியடு கள்; ஆங்கிலம் 7 பீரியடுகள்; இஷ்ட பாடங்கள் (2) 14 பீரியடு கள்; தேகப் பயிற்சி 5 பீரியடு கள்; ஒழுக்க போதனை, புத்தக சாலை 2 பீரியடுகள்.

இஷ்ட பாடங்கள் ஜாபிதா

முதல் ஜாபிதா: விஞ்ஞான பாடங்கள்:—கணிதம், பௌதி கம், ரசாயனம், உடற்கூறு சாஸ் திரம், பூகோளம்.

(47-ம் பக்கம் பார்க்க)

சொல்வளம்

[கி. ஆ. பெ. விசுவநாதம்]

உலகின் ஐந்து கண்டங்களி லும் உள்ள 250 கோடி மக்க ளால பேசப்படுகின்ற மொழி கள் சற்றேறத்தாழ 2000 மொழிகளாகும். அவற்றுள் எழுத எழுத்துக்களைப் பெற்ற மொழிகள் 900க்கு உட்பட்ட வையே. இவற்றுள்ளும் இலக் கிய, இலக்கணச் சிறப்பு உள்ள மொழிகள் 216. இவைகளுள் எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு தமிழ்மொழி ஒன்றிற்கு மட்டுமே உள்ளது. அதுவும் ஒன்றல்ல, பல.

அவை பழமைச் சிறப்பு, இளமைச் சிறப்பு, இனிமைச் சிறப்பு, தனிமைச் சிறப்பு, எளிமைச் சிறப்பு, வளமைச் சிறப்பு, ஒலிச்சிறப்பு, சுழிச் சிறப்பு, எழுத்துச் சிறப்பு, சொற் சிறப்பு, பொருட் சிறப்பு, நூற்சிறப்பு, கவிதைச் சிறப்பு, உவமைச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு எனப் பதினாறும்.

வளமைச் சிறப்பு

இவற்றை விரிக்கிற் பெருகும். இதனடியில் விளக்குவது தமி ழின் வளமைச் சிறப்பு ஒன்று மட்டுமே இதனைச் 'சொல்வளம்' என்பர் அறிஞர். தமிழிற் காணப் படுகின்ற இச்சொல்வளத்தைப் பிற மொழிகள் எவற்றிலும் காண இயலாது. எடுத்துக்காட் டாக 'இலை' என்பதையே பார்ப் போம்.

இதை 'லீப்' என்பர் ஆங்கி லேயர். 'பத்திரம்' என்பர் வட மொழியாளர். இதற்குத் தமிழில் உள்ள சொல்வளத்தைப் பாருங் கள். தமிழில் எல்லா இலைகளை யும் 'இலை' என்பதில்லை.

ஆல், அரசு, அத்தி, வாழை, மா, பலா முதலியவற்றின் இலை

(46-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது ஜாபிதா: மனித இயல் பற்றிய பாடங்கள்:-இந்திய சரித்திரம், உலக சரித்திரம், தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், அராபிய, பாரஸீக மொழிகள் முதலியவை. பிரெஞ்சு, ஹிந்தி, குடும்பக் கலை, சங்கீதம்.

மூன்றாவது ஜாபிதா: தொழில் கல்விக்கு முந்திய படிப்பு (பிரீ-புரொபஷனல்):- எஞ்சினீயரிங்; ஜவுளித் தொழில் நுட்பப் படிப்பு; விவசாயம், படம், ஓவியம் வரை தல்.

4—வது ஜாபிதா: வர்த்தகம், டெக்னிகல் பாடங்கள்:- புக்-கீப் பிங், டைப்ரைட்டிங், சுருக் கெழுத்து, கமர்ஷியல் ஜியாகரபி, ஸெக்ரடேரியல் பயிற்சி.

களுக்கு மட்டுமே 'இலை' என்று பெயர்.

அகத்தி, பசலி முதலியவற்றின் இலைகளுக்குப்பெயர் 'இலை' என்பதல்ல. அவற்றின் பெயர் 'கீரை'.

மண்ணிலே படர்கின்ற கொடி வகை இலைகளின் பெயர் 'இலை' என்பதல்ல, அவற்றின் பெயர் 'பூண்டு'.

அறுகு, கோரை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் 'இலை' என்பதல்ல, அவற்றின் பெயர் 'புல்'.

நெல், வரகு முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் 'இலை' என்பதல்ல, அவற்றின் பெயர் 'தாள்'.

மலையிலே விளைகின்ற உசிலை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் 'இலை' என்பதல்ல, அவற்றின் பெயர் 'தழை'.

சப்பாத்தி, தாழை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் 'இலை' என்பதல்ல, அவற்றின் பெயர் 'மடல்'.

கரும்பு, நாணல் முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் 'இலை' என்பதல்ல, அவற்றின் பெயர் 'தோகை'.

தென்னை பனை முதலியவற்றின் இலைகளுக்குப் பெயர் 'இலை' என்பதல்ல, அவற்றின் பெயர் 'ஓலை'. இவை அனைத்திற்கும் 'பத்திரம்' என்ற வடமொழிச் சொல்லோ, 'லீப்' என்ற ஆங்கிலச் சொல்லோ பொருந்துமா? என்று பாருங்கள். அப்பொழுது தான் தமிழ்மொழியின் சொல் வளம் நன்கு விளங்கும்.

இச் சொல்வளத்திலும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. இது இலையின் உருவத்தோடு அதன் பருவத்தையும் சேர்த்துக் காட்டுவதாகும். குழந்தைப் பருவ இலையைத் 'தளிர்' என்றும், இளமைப் பருவ இலையைக் 'கொழுந்து' என்றும், நடுப்பருவ இலையை 'இலை' என்றும், முதுமைப் பருவ இலையைப் 'பழுப்பு' என்றும், இறுதிப்பருவ இலையைச் 'சருகு' என்றும் கூறுவர். என்னே தமிழின் சொல்வளம்!

வாயசைப்பு

இன்னும் மனிதனின் வாயசைப்பிற்குத் தமிழில் உள்ள சொல்வளத்தைக் காணுங்கள். அலறினான், அழுதான், ஆவென்றான், இளித்தான், ஈயென்றான், உறுமினான், ஊளையிட்டான், எக்களித்தான், ஒலித்தான், ஓவென்றான், ஓதினான், கத்தினான், கனைத்தான், கீச்சிட்டான், குசுகுசுவென்றான், கூவினான், கொக்கரித்தான், கோவென்றான், சப்பினான், சிரித்தான், சீறினான், சேயென்றான், சொன்னான், திக்கினான், திட்டினான், படித்தான், பழித்தான், பாடினான், பிதற்றினான், பேசினான், பொழிந்தான், போதித்தான், விளக்கினான், வீறிட்டான், வைதான், வாழ்த்தினான், என்ற இவை

மட்டுமோ? இன்னும் எத்தனையோ?

இச்சொற்கள் வாயின் அமைப்பை மட்டுந்தானா காட்டுகின்றன? அசைவின் ஒலியையும், ஒலியின் தரத்தையும், ஒலிப்பவனது முகத்தையும் அவன் உள்ளத்தையுங்கூட காட்டிக் கொண்டிருக்கின்றன காணுங்கள். இவை அனைத்திற்கும் 'சப்தித்தான்', 'கர்ஜித்தான்' என்ற வடமொழிச் சொற்கள் பொருந்துமா? என்று பாருங்கள். அனைத்திற்கும் ஆங்கிலத்தில் சொற்களுண்டா? என ஆராய்ந்து பாருங்கள். இவற்றில் சிலவற்றிற்கேனும் இந்தியில் சொற்களிருக்குமா? என்று எண்ணிப் பாருங்கள். அப்பொழுதுதான் விளங்கும் தமிழின் சொல்வளம்.

இவை தமிழின் சொல்வளத்தைக் காட்டப் போதுமானவை என எண்ணுகிறேன்.

"தமிழ்நாடு"

அறிவுக் கதிர்

நூல் நிலையம்தான் பெரியோர்கள் வாழும் புண்ணிய ஸ்தலம். அங்கே எப்போதும் அறிவுமணம் கமழ்ந்துகொண்டே இருக்கும்.

— லாம்ப்

உலகம் கானல் நீர் அல்ல—ஒரு கடல். இந்தக் கடலில் நீந்துவதும் அமிழ்ந்து போகிறவர்களுக்குக் கைகொடுப்பதுமே நம் வேலை.

— காண்டேகர்

நிறையப் படி. இல்லையேல் படிக்காமலே இருந்துவிடு. அரைகுறையாக மட்டும் படித்து நின்றுவிடாதே. அது மிகவும் ஆபத்தான செயல்.

— அலெக்ஸாண்டர் போப்

சட்டம் பலமுள்ளது. ஆமாம். ஆனால் அவசியம் அதைவிடப் பலமுள்ளது.

கதே

மிக உயர்ந்த மிக நுண்ணிய ஓர் எண்ணம் திடீரென்று அரும்பி, அழகாக மலர்ந்து, அருமையாக மணம் வீசுகின்ற இனிமையான காட்சிக்குத்தான் தூய்மையான கவிதை என்று பெயர்.

— இங்கர்சால்

எதிர்பாராப் பெருஞ்செல்வம்

பெருஞ்செல்வம் திரட்ட வேண்டும் என்ற எண்ணங் கொண்டு பலர் பல துறைகளில் இறங்குவதுண்டு. இடர்கள் பல ஏற்று, விடா முயற்சியுடன் ஓயாது உழைத்தாலும், ஆண்டுகள் பல கழிந்த பின்னர்தான் செல்வம் குவியும் வழிபிறக்கும். அதுவும் சிலருடைய முயற்சியில் தான் அமையும். ஆனால் செல்வம் திரட்டவேண்டும் என்ற எண்ணமே கொள்ளாத சிலருக்குச் சில எதிர்பாரா நிகழ்ச்சிகள் மூலம் பெருஞ்செல்வம் சேர வழி ஏற்பட்டுவிடுவதுண்டு.

எதிர்பாரா நிகழ்ச்சிகள் என்று கூறுவது, மந்திரம் என்று கூறித் தந்திரம் செய்வதையோ அல்லது பானை பானையாகப் புதையல்கள் எடுப்பதையோ குறிப்பதாகாது. மனித வாழ்க்கை வசதிகள் பெருகும் வண்ணம் புதிய கருவிகள் கண்டுபிடித்தலையே எதிர்பாரா நிகழ்ச்சி என்பது இங்குக் குறிக்கும்.

எதிர்பாராத நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பல புதியன கண்டுபிடிக்கப்பட்டு அதன் மூலம் சிறுசிறு கருவிகள் செய்யப்பட்டு, அவை, கண்டுபிடித்தவருக்கோ அல்லது உற்பத்தியாளருக்கோ, பல சமயங்களில் பெருஞ்செல்வத்தை அளிக்கக்கூடியனவாக அமைந்துவிடுகின்றன.

ஊக்கு, அழிக்கும் ரப்பர் கொண்ட பென்சில், ரப்பராலான அடியைக் கொண்ட செருப்பு, 'பேப்பர் கிளிப்', டின் மூடி இன்னும் இவைபோன்ற பல சிறு கருவிகளின் கண்டுபிடிப்புகளுக்கும், அவைகளைக்கண்டுபிடித்தவர்களுக்கும் அறிவியல் வரலாற்றேட்டில் அதிமுக்கியத்துவமான இடம் கொடுக்கப்படாவிட்டாலும், அச்சிறு கருவிகளின் மூலம் பெருஞ்செல்வம் சேர்க்கப்பட்டது. அநேகமாக இக்கருவிகளெல்லாம் எதிர்பாரா நிகழ்ச்சிகளில் இமைப்பொழுது ஆராய்ச்சிகளின் பயனாகக் கண்டுபிடிக்கப்பட்டவைகளாகும்.

அமெரிக்க நாட்டில் பிலடெல்பியா நகரைச் சேர்ந்த ஹைமன் லிப்மன் என்பவரைப்போல் ஒரே சமயத்தில் பெருஞ்செல்வம் பெற்றவர் வேறெவரும் இல்லையென்றே சொல்லலாம். பென்சிலினால் காகிதங்களில் எழுதிக் கொண்டிருக்கும்போது ஏற்படும் தவறுகளை அழிப்பதற்கு அழிக்கும் ரப்பரைத் தேடிக்கொண்டிருப்பதைவிட அதைப் பென்சிலின் மறுமுனையில் பொருத்திக் கொண்டால் என்ன என்று எண்ணி அதற்குப் ஒரு வழியையுங் கண்டார். அவர் தன்னுடைய புதிய பென்சிலுக்கு ஒரு தனி உரிமை (Patent)யை எடுத்துக்

கொண்டார். அந்த உரிமையை விற்றதால் லிப்மனுக்கு ஒரு லட்சம் டாலர் கிடைத்ததாம.

வாஷிங்டன் நகரில் கிளார்க் வேலை பார்த்து வந்த ஒருவர் ஒரு நாள் தெருவில் காருக்காகக் காத்துக்கொண்டிருந்தாராம். கார் வருவதற்கு நேரமாகும்போலிருந்தது. அவர் அங்கே கீழே கிடந்த ஒரு கொண்டை ஊசியை எடுத்து விளையாட்டாக விரலுக்கிடையில் வளைத்து சுற்றிக் கொண்டிருக்கும்போது அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அவருடைய கையிலிருந்த அக்கொண்டை ஊசி, எப்படியோ வளைந்து, பல காகிதங்களை சேர்த்துப்பிடிக்கவல்ல ஒரு கருவி போல் அமைந்திருந்ததை அவர் கண்டார். அதன் மூலம் பிறந்ததே இன்று நாம் உபயோகிக்கும் 'பேப்பர் கிளிப்'. இக்கருவியின் தனி உரிமை மூலம் அவருக்குப் பெரும் பொருள் கிடைத்தது.

ரப்பராலான அடிகளைக் கொண்ட செருப்புகளை முதன் முதல் செய்துகாட்டியவர் டானியல் ஓ சுலிவன் என்பவராவர். அவர் மின்சாரம் சம்பந்தப்பட்ட பல பொறிகளை ஆராய்ந்துபார்க்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தார். மின் அதிர்ச்சி ஏற்படாமலிருக்கக் கீழே ஒரு ரப்பர் விரிப்பைப் போட்டு அதன்மேல் நின்றுகொண்டு வேலை செய்து வந்தார். ஆனால் அடிக்கடி ரப்பர் விரிப்பைப் போட்டுக்கொள்ள மறந்துவிடுவார். அச்சமயங்களிலெல்லாம் அவர் மின் அதிர்ச்சிக்குள்ளாவார். இந்த சங்கட நிலையிலிருந்து விடுபட ஒரு நாள் அவர் அந்த ரப்பர் விரிப்பிலிருந்து தனது செருப்புகளுக்குச் சேரும்படியாக இரண்டு துண்டுகள் வெட்டியெடுத்து அவைகளைத் தனதுசெருப்புகளின் அடியில் வைத்து சிறு ஆணிகள் மூலம் அடித்துக்கொண்டார். அது அவருக்கு மிகவும் வசதியாகத் தென்படவே ரப்பராலான அடிகளைக் கொண்ட செருப்புகளைத் தயாரிக்கலாம் என்று கண்டார். அதற்குத் தனி உரிமையும் பெற்றுப் பெரும்பொருள் அடைந்தார்.

சென்ற நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்காவில் மாட்டுப் பண்ணைக்காரர்களெல்லாம் தங்கள் தங்கள் மாட்டு மந்தைகளுடன் மேற்கு நோக்கி நகர வேண்டிய காலம் வந்தது. அங்கே மரத்தினாலும், கம்பியினாலும் ஆன வேலிகளுக்கிடையே மாடுகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. ஆனால் இடம் மாறுபட்டதின் காரணமாகவோ என்னவோ மாடுகள் அந்தவேலியைத் தகர்த்து விட்டுத் தாண்டிப்போக ஆரம்பித்தன. இதைப்பார்த்த மேய்ப்பாளர்கள் வேலிகளிடையே ஈட்டிகளையும், கூர்மையான ஆயுதங்களையும், முட்களையும் பொருத்தி மாடுகள் வெளியேறுவதைத் தடுத்தனர். பின்னர் மாடுமேய்க்கும் ஒரு சிறுவன் முதல் முள்வேலியை உண்டாக்கி

ஞன். வேலிகளில் இருக்கும் கம்பிகளை இரு முனைகளும் கூர்மையாக உள்ள சிறு கம்பிகள் கொண்டு பின்னினான். இதைக் கண்ட **ஜோசப் கிளிடென்** என்பவர் 1873-ல் அதற்கு **முட்கம்பி** என்ற பெயரில் ஒரு தனி உரிமை பெற்றார். உற்பத்தியாளர் ஒருவர் அந்த உரிமையை 60,000 டாலர் கொடுத்து வாங்கியதோடு, உற்பத்தியாகும் ஒவ்வொரு நூறு பவுண்டு எடைக் கம்பிக்கும் கால் டாலர் வீதம் உரிமைப் பங்காகக் கொடுப்பதற்கும் உடன்பட்டார். அதன் உரிமைப் பங்குத்தொகை மட்டும் பத்து லட்சக்கணக்கில் கிடைத்ததாம்.

பவுடர் டின்களில் காணப்படும் சிறு மூடிகள்—சிறிது சுற்றுவதால் மூடிக்கொள்வது — மிகச் சாதாரணமான அமைப்பைக் கொண்டதேயாகும். ஆனால், அதை முதன் முதல் கண்டு பிடித்த **வில்லியம் கென்டால்** என்பவருக்கு அதன் தனி உரிமையை விற்றதில் 25,000 டாலர் கிடைத்ததாம்.

இன்று எல்லோரும் உபயோகிக்கும் ஊக்கு போன்ற ஒரு பொருள் பன்னெடுங்காலமாகவே பல்வேறு அமைப்புகளில் உபயோகத்தில் இருந்துவந்திருக்கிறது. ஆனால் எவரும் அதன் தனியுரிமையைக் கொள்ளவில்லை என்பதை யறிந்த **வால்டர் அன்ட்** என்பவர் 1849-ல் அதற்கு ஒரு உருவங்கொடுத்து அதன் தனி உரிமையையும் பெற்றுப் பெரும்பொருள் அடைந்தார். ஊக்கைக் கண்டுபிடித்தவர் அவரே என்ற பேரையும் பெற்றார்.

வில்லியம் பெயின்டர் என்பவர் கண்ட ஒரு சிறிய கண்டுபிடிப்பால் அவரும் அவரது மரபினரும் பெரும் பொருளீட்டும் நிலையை யடைந்தனர். அவர் கண்டு பிடித்தது, பீர் புட்டிகளையும், சோடாபுட்டிகளையும் காற்றுப்புக இயலாதவாறு மூடத்தக்கனவாய் அமைந்த ஒரு மூடியேயாகும்.

இன்று மணிப்பர்சிலும், தோல்பையிலும், சட்டைகளிலும் இன்னும் பல வகைகளிலும் பயன்படுத்தப்படும் **சிப்பர்** என்று சொல்லப்படும் இணைப்புப்பூட்டு நாடா சென்ற நூற்றாண்டின் இறுதியில் தோன்றியதாகும். **விட்கோம்பு ஜட்சன்** என்பவர் அதற்கு முதன் முதலில் உருக்கொடுத்தவராவர். 1893-ல் சிகாகோ நகரில் நடைபெற்ற உலகப் பொருட்காட்சிசாலையில் ஜட்சன் அதன் மாதிரி ஒன்று வைத்திருந்தார். ஆனால் அதை ஒரு நாடாவைப்போன்று செய்து ஒரு வளையத்தை இழுத்தால் மூடிக்கொள்ளும்படியாகவும், திருப்பி இழுத்தால் திறந்து கொள்ளும்படியாகவும் செய்தது **கிடேயன் சண்ட்பாக்** என்பவராகும். ஜட்சன் தான் கண்டு பிடித்ததை மேற்கொண்டு ஆராயாமல் விட்டுவிட்டார். பின்னர்

சண்ட்பாக், **வால்கர்** என்ற வழக்கறிஞர் ஒருவரின் தூண்டுதலால் அதை ஆராய்ந்து 1906-ல் நழுவிச்செல்லும் இணைப்புப் பூட்டைக் கண்டு பிடித்தார். ஆனால் சில சமயங்களில் இணைப்பு வேலை செய்யாமல் இருந்தது. இதற்கிடையில் சண்ட்பாக் பிரிந்துசெல்ல, வால்கர் தனித்துத் தனது பிள்ளைகளுடன் மெட்வில் என்ற நகரில் சிப்பர் வாணிபம் செய்ய முற்பட்டார். வால்கர் ஒரு தையற்காரரையணுகி சிப்பரை மாலுமிகள் பணம் வைத்துக்கட்டிக்கொள்ளும் கச்சைகளில் பொருத்தித் தைக்குமாறு வேண்ட, அது நல்ல பயனைக் கொடுக்க ஆரம்பித்தது. 1920 வரையில் 30 தொழிலாளர்களுடன் கூடிய ஒரு சிறிய கம்பெனியாகத்தான் வால்கர் கம்பெனி விளங்கியது. அதே யாண்டு **குட்ரிச்** என்ற கம்பெனியார் மேலுறை கொண்ட செருப்புகளில் சிப்பரைப் பொருத்தலாம் என்று கண்டு அதன் உரிமையைப் பெருஞ்செல்வம் கொடுத்து வாங்கினர். 'சிப்பர்' என்ற பெயரை குட்ரிச் கம்பெனியார்தான் கொடுத்து அதற்கும் ஒரு தனி உரிமை எடுத்திருந்தனர்.

இத்தகைய சிறுசிறு கருவிகள் கண்டுபிடிக்கப் பட்டதைப் போலவே, சிக்கல் நிறைந்ததும், எல்லோராலும் போற்றப்படுவதுமான பொருள்கள் பல இமைப்பொழுது ஆராய்ச்சியினாலும் எதிர்பாரா நிகழ்ச்சியினாலும் கண்டுபிடிக்கப்பட்டனவாகும்.

இன்று நாம் எல்லோரும் உபயோகிக்கும் மை ஒத்தும் தாள் இரு எதிர்பாரா நிகழ்ச்சிகளில் பிறந்ததென்று கூறப்படுகிறது. காகிதத் தொழிற்சாலையொன்றில் தொழிலாளி தூங்கிக்கொண்டிருந்த காரணத்தால் படிவான காகிதக்குழம்பு கொஞ்சம் இயந்திரத்திற்குள் செல்லாமல் நின்றுவிட்டது. அதனால் அது வீணாகிய நிலையில் வெளியில் எடுத்துப் போடப்பட்டது. அங்கு வேலை பார்த்துவந்த ஒரு கிளார்க் வீணாகிய தாளில் ஒரு துண்டை எடுத்துத் தனது மேசையில் சிந்தியிருந்த மையைத் துடைத்தார். அப்போது மை முழுவதையும் அந்தக் காகிதம் வெகுசீக்கிரத்தில் உறிஞ்சிவிட்டதைக் கண்டார். இதிலிருந்து மை துடைக்கும் தாள் கண்டுபிடிக்கப்பட்டது.

பலவிதப் பொட்டணங்களிலும் அட்டைப் பெட்டிகளிலும் சுற்றப் பயன்படுத்தப்படும் கண்ணாடித்தாள் **பிராண்டன் பெர்கர்** என்ற சுவிட்சர்லாந்து பிரஞ்சுக்காரரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். 1908-ல் அவர் மரக்குழம்புடன் **ரேயான்** என்ற பொருளைச் சேர்த்து ஆராய்ந்து கொண்டிருக்கும்பொழுது, ஒளி ஊடுருவிச் செல்லும்படியான மெல்லிய ஏடு ஒன்று படிவதைக் கண்டார். அதை மேலும் ஆராய்ந்து 1912-ல் தற்போ

துள்ள கண்ணுடித்தாளைக் கண்டு பிடித்தார். 1923-ல் து பாண்ட் என்பவர் அமெரிக்கத் தனியுரிமையைப்பெற்று மேலும் செம்மையாக்கி நீர்புகமுடியாத கண்ணுடித்தாளைக் கண்டுபிடித்தார்.

ரேயான் என்ற செயற்கைப் பட்டும் எதிர்பாரா நிகழ்ச்சிஒன்றின் மூலம்தான் கண்டுபிடிக்கப்பட்டதாகும் கவுண்ட் ஹில்லேர் என்பவர் பலவித ரசாயனப் பொருள்களைச் சேர்த்து ஒரு புட்டியில் காய்ச்சிக்கொண்டிருக்கும்போது புட்டி சாய்ந்து அவருடைய கைகளில் கூழ் நிலையிலுள்ள அந்தப் பொருள் சிதறி வழிந்தது. அதை உடனே அகற்றமுடியவில்லை. மிகவும் இறுகலாகப் பிடித்துக்கொண்டது. ஆனால் விரல்களின் அசைவினால் அப்பொருள் நூல் இழைபோல் உண்டாகவே அதை நன்முக ஆராய்ந்தார். அதன் முடிவாகவே ரேயான் என்ற செயற்கைப் பட்டு உற்பத்தியைக் கண்டுபிடித்தார்.

இதேபோன்று பலப்பல பொருள்கள், எதிர்பாராத சில நிகழ்ச்சிகளினுலும், சிறிதுநேர ஆராய்ச்சிகளினுலும் கண்டுபிடிக்கப்பட்டுப் பலருக்குச் செல்வம் சேர வழியை ஏற்படுத்துகின்றது.

அறிவியல் வளரவளர, மனித வாழ்க்கை வசதிகள் பெருகப் பெருகப் புதியபுதிய கருவிகளின் தேவைகளும் அதிகமாகிக் கொண்டே போகின்றது. எல்லோருக்கும் பயன்படும் வகையில் ஒரு எளிய கருவியைக் கண்டு பிடித்தால் நீங்கள்கூடப் பெரும் பொருள் சேர்க்கலாம்.

— 'மன்றம்'

அறிவுக் கதிர்

தன் தாய்நாட்டைக்கூட நேசிக்காதவன் ஒருவன் இருக்கிருனு? அப்படியானுல் அவனுல் யாரையுமே நேசிக்க முடியாது.

— பைரன்

யார் யார் மிகுந்த துன்பத்தைக் கொடுக்கிருர்களோ அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள். ஆனுல் யார் யார் மிகுந்த துன்பத்தைப் பொறுக்கிருர்களோ அவர்கள்தான் வெற்றி அடைவார்கள்.

— மாக்ஸ்வினி

வாழ்க்கை என்பது ஓர் இருட்டறை. அதில் அன்பும் காதலும் இரண்டு ஒளிவிளக்குகள். இந்த விளக்குகள் இல்லையேல் வாழ்க்கையால் பயன் இல்லை.

— தாமஸ் மூர்

தன் உரிமைகளுக்காகப் போராடும் துணிச்சல் இல்லாதவனுக்குத் தன் உரிமைகளுக்கு உரிமை கொண்டாட உரிமை ஏது?

— டென்னிசன்

கிருமிகள் வழங்கும் மின்விசை

கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய உயிரினங்களில் "பாக்டீரியா" எனப்படும் கிருமி இனம் ஒன்று. இக் கிருமிகளிலிருந்து மின்விசை உற்பத்தி செய்யலாம் என்று இப்பொழுது அமெரிக்க விஞ்ஞானிகள் இருவர் கண்டு பிடித்திருக்கின்றனர்.

மின்விசை உறபத்திக்கு அமிலத்தையும் உலோகத்தையும் பயன் படுத்துவது இரசாயன மின்கலம். இன்று வாஷிங்டனில், டாக்டர் பிரடரிக் ஸிஸ்லர், டாக்டர் ராபர்ட் ஸர்பாஷர் இருவரும் "உயிரின மின்கலம்" ஒன்றை உருவாக்கியுள்ளனர். இதில் இருப்பது பாக்டீரியாக் கிருமிகளே; இவை பேசாமல் இரை தின்று உயிர் வாழ்ந்து மின்விசை பிறப்பிக்கின்றன.

அந்த பாக்டீரியாக்களைக் கடல் தண்ணீர் ஊற்றிய சோதனைக் குழாய்க்குள் இட்டு, அதனுள் டாக்டர் ஸிஸ்லர் இரண்டு மின்வாய்களை (எலக்ட்ரோடுகளை) நுழைத்ததும், இலேசாக மின் விசை உற்பத்தியானதைக் கண்டார். பிறகு, மின்வாய்களில் ஒட்டியிருக்கும்படி பாக்டீரியாக் கிருமிகளை அவற்றில் பூசி வைக்கும் முறை ஒன்றை டாக்டர் ஸர்பாஷர் கண்டுபிடித்தார். இதனால், இரண்டு வோல்ட் அழுத்த முள்ள மின்விசை கிடைத்தது. அது ஒரு சிறிய மின்விளக்கை எரிய வைத்தது; ஒரு டிரான்ஸிஸ்டர் ரேடியோவைப் பாட வைத்தது.

இக் கிருமிகள் என்ன தின்று உயிர் வாழ்கின்றன என்று கண்டுபிடித்ததும் மிகவும் முக்கிய மாகும். குப்பை கூளங்கள், சாக்கடைக் கழிவுகள் முதலியவற்றையே இவை தின்கின்றனவாம். தின்பவை தாமும் கழிவு செய்வதில்லை.

பாக்டீரியாக் கிருமிகளைக் கொண்டு மின்விசை உற்பத்தி செய்வதும் அல்லாமல், சாக்கடைகள் கலக்கும் ஆறுகளையும் சுத்தம் செய்யும் நாள் வரும் என்கிறார்கள் விஞ்ஞானிகள். அப்பொழுது சாககடைக் கழிவுகளைச் சுத்தம் செய்வதற்கு இன்று பயன்படும் சுத்திகரிப்பு ஆலைகள் ஒன்றுமே வேண்டியதில்லை.

பாக்டீரியாவினால் நாம் எவ்வளவு மின்விசை வேண்டுமானாலும் உற்பத்தி செய்ய முடியும் என்கிறார்கள். மின்விசை உற்பத்தி செய்யும் பாக்டீரியாக்களுக்கு வேண்டிய உணவுகள் உலகத்திலேயே கருங்கடலில்தான் அதிகமாக இருக்கின்றன போலும் என்றும், மேற்சொன்ன அமெரிக்க விஞ்ஞானிகள் இருவரும் குறிப்பிடுகின்றனர் வீடுகளுக்கு விளக்கெரிக்கவும், வானொலிப் பெட்டியைப் பாட வைக்கவும் ஒரு விசைப் படகை

இயக்குவதற்குங்கூட, பாக்டீரியாக் கிருமிகளிலிருந்து மின்விசை பெறலாம்; அதற்குத் தக்கபடி பெரிதாக அமைந்த மின்வாய்களை உருவாக்க வேண்டும்; அந்த நாளும் வரலாம் என்கிருர்கள் அவர்கள்.

பாக்டீரியாக் கிருமிகளை மைக்கிராஸ்கோப் கண்ணுடி வழியாகத்தான் பார்க்க முடியும். இவை ஒரே ''செல்'' உள்ள உயிரினங்கள். இவை இரண்டு துண்டாக வெடித்துத்தான் பல்குகின்றன. சில வகை பாக்டீரியாக்கள் கால் மணி நேரத்துக்கு ஒரு முறை இவ்வாறு வெடிக்கும். ஒரு சிறு சிட்டிகை மண்ணில் 20 கோடி பாக்டீரியாக் கிருமிகளும் இருக்கும்.

உயிர் உள்ளனவும் இல்லனவும் எப்போதும் மின்விசை பிறப்பிக்கின்றன என்பது நெடுங் காலமாகவே தெரிந்தஉண்மையாகும். மின்விசை இரசாயன முறையில் அல்லது பொறி முறையில் உற்பத்தியாகிறது. உயிர் வாழ்வன இரசாயன முறையில் மின்விசை உற்பத்தி செய்கின்றன. உற்பத்தியாகும் மின்விசையை உபயோகப்படுத்த வழி காண்பதுதான் சிக்கலானது.

பாக்டீயாக் கிருமிகள் எப்படி மின்விசை பிறப்பிக்கின்றன என்பது இன்னும் தெரியவில்லை.

ஆயினும், பாக்டீரியாவிலிருந்து மின்விசை எடுக்கலாம் என்ற புதுமையைக் கண்டுபிடித்த அமெரிக்க விஞ்ஞானிகள் இருவரும் உலகில் எல்லோருக்கும் நலம் பயக்கக் கூடிய வகையில் மலிவான, வற்றுத மின்விசை மூல வளம் ஒன்றைக் கண்டுபிடித்தவர்களாவர்.

முத்துக் குவியல்

(தொகுப்பாளர் :— துரை. முருகேசன்)

யாரிடம் பேசுகிறுய், யாரைப் பற்றிப் பேசுகிறுய், எப்படி, எங்கே, எப்பொழுது பேசுகிறுய்? இந்த ஐந்து விடயங்களிலும் உன் உதடுகளை (வாயை)க் கவனமாக வைத்திரு

— நாரீஸ்

காதலுக்குக் கண்கள் இல்லை; ஆனல் கால்கள் உண்டு.

[illegible]டி எம்மென்

சீரான வாழ்க்கையை நடத்திப் பொருளைச் சேமிப்பதுதான் ஏழையின் நாணய உற்பத்திச்சாலை.

— டப்பர்

மதங்களில் கட்டுப்பாடுகள் அதிகம்; ஆனல் நூல்களில் சீர்திருத்தம் அதிகம்.

— திரு. வி. க.

சோவியத்து நாட்டிற் கல்வி

[டாக்டர் அ. சிதம்பரநாதன், எம்.ஏ., எம்.எல்.சி.]

சோவியத்து நாட்டிற் கல்விக்குப் பெரிய மதிப்பு அளிக்கப்படுகிறது. இருபது ஆண்டுகளுக்கு முன் அத்தேசத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து பேரே எழுதப் படிக்க அறிந்தவராய் இருந்தனர். இப்பொழுதோ அந்நாட்டில் எழுததறியாமை என்பது அறவே நீங்கி விட்டது. அரசாங்கம் மக்களுடைய பல திறக் கல்வியில் மிக்க கவனம் செலுத்துகிறது. உயர்தரப் பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படும் சாதாரணக் கல்வி அல்லாமலும், தொழில்துறைக் கல்வியை அளிக்கக்கூடிய வசதிகள் நிரம்பிய புதுவகைப் பள்ளிக்கூடங்கள் பற்பல அமைக்கப்பட்டு, அவை வாயிலாக மாந்தர் அனைவரும் பலதிறக் கல்வி பெறுதற்கு வாய்ப்புக்கள் வகுத்துத் தரப்பட்டிருக்கின்றன, புதுவகை உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் கணக்கு, வேதிநூல், உயிர்நூல், வரலாறு, இலக்கியம் ஆகியவை கற்பிக்கப்படுவதோடன்றி, ஓரளவு பொறியியல் அறிவும் அளிக்கப்படுகின்றது. சோவியத்து உருசியாவில் ஏறத்தாழ எட்டு இலட்சம் பொறியியல் வல்லுநர் உள்ளார்கள். இன்னொரு சிறப்பு என்னவென்றால், அந்நாட்டிலுள்ள இருபது கோடி மக்களில் ஏறத்தாழ ஐந்து கோடி மக்கள் ஏதாவதொரு வகைக் கல்வியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர் என்பது. மற்றொரு சிறப்பு தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே கற்பதற்கு வசதிகள் பெற்றிருக்கிறார்கள் என்பது. நாடோறும் பகலில் அவர்கள் வேலைபார்த்த பிற்பாடு பள்ளிக்கூடத்திற்குப் போய் இரவில் மேறபடிப்பு பெறறுத் தேர்வுகள் எழுதிச் சான்றிதழ்களும் பட்டங்களும் பெறுதற்கு வசதிகள் செய்து தரப்பட்டுள. இவ்வாறு, படிக்க விரும்புபவர்கள் தொழிற்சாலைகளிற் பகல்நேர வேலைசெய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இத்தகைய தொழிலாளர்கள் அவர்களுக்கு இயல்பில் கிடைக்கக் கூடிய விடுமுறை நாட்களை விட அதிகமான விடுமுறை நாட்கள் தேர்விற்கெனக் கற்பதற்கும், தேர்வு எழுதுதற்கும் பெறுகிறார்கள்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் உருசிய தேசத்தில் மொத்தத்தில் இருபத்தொரு நகரங்களில்தான் கல்லூரிகளோ பல்கலைக்கழகங்களோ இருந்தன. ஆனால், இப்பொழுதோ ஏறத்தாழ இருநூற்றிருபது இடங்களிற் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் உள. அவைதம்முள் நாற்பது உயர்தரக் கல்வி நிலையங்கள்—பல்கலைக்

கழகங்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இலெனின் குன்றில் அமைக்கப்பட்டுள்ள மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் பதினையாயிரம் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆசிரியர்கள் உள்ளார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் ஆறாயிரம் பேர் ஒரே இடத்தில் தங்குதற்கு அழகான பெரியதொரு முப்பத்திரண்டு அடுக்குமாளிகை விடுதி கட்டப்பட்டுள்ளது. அதனுள் ஒவ்வொரு மாணவருக்கும் வசதியானதோர் அறை தரப்பட்டுள்ளது. அறையின் மருங்கு ஒவ்வொரு மாணவருக்கும் தனித் தனியே குளியலறையும் முகங் கழுவிடமும் அமைந்திருப்பதால் நம் நாட்டு மாணவர்கள் குளிப்பதற்காக நெடுநேரம் காத்திருப்பது போன்ற நிலையில் அவர்கள் இல்லாததால், அந்நேரத்தையும் அவர்கள் படிப்பிற்குப் பயன்படுத்துகிறார்கள். ஆசிரியர்கள் வாழும் இடங்களாக மிக்க வசதியோடு இருநூற்றுக்கு மேற்பட்ட தட்டுகள் பல்கலைக் கழக எல்லையுள் அமைந்துள்ளன. இலெனின் கிராட் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழப் பத்தாயிரம் மாணவர்கள் சேர்கிறார்கள். கீய்வ் (KIEV) பல்கலைக்கழகத்தில் ஏறத்தாழ ஆறாயிரம் மாணவர்கள் சேர்கிறார்கள். குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், மாணவர்களிற் பெரும்பாலோர் தொழிற்சாலையர் குடும்பங்களிலிருந்தும், குடியானவர்கள் குடும்பங்களிலிருந்தும் வருபவர்கள் என்பது. அவர்களெல்லாம் காசின்றிக் கல்வி பெறுகிறார்கள். அன்றியும், நூற்றுவரில் எண்பது பேர் அரசாங்கப் பணவுதவி வேறு பெறுகிறார்கள்.

அஸ்பெக்கிஸ்தான் (UZBEKISTAN) கசாக்ஸ்தான் (KAZAKHSTAN), டாஜிகிஸ்தான் (TAJIKISTAN) போன்ற தேசியக் குடியரசுப் பகுதிகளில் உயர்தரக் கல்வியும் பல்கலைக் கழகக் கல்வியும் தாய்மொழியில் அல்லது உருசியன் மொழியில் அளிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் கிர்கிஷியா (KIRGHIZIA) பகுதியைச் சார்ந்த மக்கள் எழுத்து வளமுடைய மொழியைப் பெற்றிருந்தாரில்லை. ஆனால் நல்ல முயற்சியின் பயனாய் இப்பொழுது கிர்கிஷிய மக்கள் எழுத்துவடிவுள்ள மொழியைப் பெற்றிருப்பது மாத்திரமல்லாமல், ஒரு பல்கலைக்கழகமே பெற்றுள்ளார்கள் என்பது மிகவும் வியக்கத் தக்கது அங்கே பல்கலைக்கழகம் ஒன்றும், மகளிருக்கு எனத் தனிப் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் ஆசிரியர் பொதுப் பயிற்சிக் கல்லூரிகள் ஐந்தும், முப்பது தொழில்துறை உயர்தரப் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டுள்ளன என்பது பாராட்டத்தக்கது. அதனால், மக்களும் அரசாங்கமும் மனம் வைத்தால் வளம்படாத மொழியைக்கூட எவ்வளவு வளம்

படுத்திவிடமுடியுமென்பது தெரியவரும். அவ்வாறு இருப்பவும், நல்ல வளமுடைய மொழியாக, செம்மைசால் மொழியாகப் பண்டு தொட்டே அமைந்து இன்றளவும் வாழ்ந்து வளர்ந்து பயன்பட்டு வருகின்ற தமிழ் மொழியை மேலும் வளம்படுத்த மக்களும் அரசாங்கத்தாரும் முன்வருவார்களேயானல், உலகத்திலுள்ள பெருவளர்ச்சியுற்ற மொழிகள் என்று மதிக்கப்படும் மொழிகளில் வைத்து எண்ணக் கூடிய பெருமை தமிழ்மொழிக்குக் கட்டாயம் கிட்டும் என்பது தெளிவுறும். (பாரதி)

ஆசிரியர் குடும்ப பென்ஷன் திட்ட விவரம்

சர்க்கார் மானிய உதவி பெறும் அல்லது ஸ்தல ஸ்தாபன பள்ளிக்கூட மொன்றில் வேலை பார்க்கும் ஒரு ஆசிரியரின் குடும்பத்துக்கு, ஒரு சர்க்கார் பள்ளிக்கூடத்தில் அதே அளவு சர்வீஸிலுள்ள ஒரு ஆசிரியருக்குக் கிடைக்கும் பென்ஷனில் பாதி அளவு பென்ஷனைக் கொடுக்கப்படும்.

ஆசிரியர் குடும்பத்துக்கு பென்ஷன் அளிக்கும் திட்டத்தை அறிவித்து சர்க்கார் பிறப்பித்துள்ள உத்தரவின்விவரம் கிடைத்துள்ளது

1962 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து முன் தேதியிட்டு இத் திட்டம் அமல் நடத்தப்படும்.

ஏற்கனவே உள்ள ஆசிரியர் பென்ஷன் திட்டத்தின் அனுகூலத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் உள்பட சர்க்கார் உதவிபெறும் பள்ளிக் கூடங்களிலும் ஸ்தல ஸ்தாபன பள்ளிக் கூடங்களிலும் வேலை பார்க்கும் ஆசிரியர்களும் புதிய திட்டத்தினல் அனுகூலமடைவர்.

சர்க்கார் உத்யோகஸ்தர்கள் விஷயத்தில் போலவே, சர்க்கார் உதவிபெறும் பள்ளிக்கூடம் அல்லது ஸ்தல ஸ்தாபனம் பள்ளிக்கூட மொன்றில் 20 வருஷ காலத்துக்குக் குறையாமல் சேவை செய்த பிறகு ஒரு ஆசிரியரின் குடும்பத்துக்கு அந்த ஆசிரியர் பதவியிலிருந்து ஒய்வு பெற்ற தேதியிலிருந்து 10 வருஷ காலத்துக்கோ அல்லது 5 வருஷ காலத்துக்கோ இந்த பென்ஷன் கிடைக்கும்.

இந்தத் திட்டத்தை அனுமதித்து 1962 நவம்பரில் சர்க்காரால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

64-ம் பக்கம் பார்க்க

பிராணிகளின் கொழுப்பினால் உயிருக்கே ஆபத்து !

கொழுத்த ஆட்கள் அதிக காலம் ஜீவிப்பதில்லை.

மாமிச உணவு தேக புஷ்டியைக் கொடுக்கிறதென்று பொதுவான எண்ணம் இருப்பினும், அதிலுள்ள கொழுப்புகள் உடலில் சேருவதால் நாளடைவில் ரத்த நாளங்கள் அடைபட்டு உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறதென்பதை வைத்திய நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். இதனால் தான் உடலுக்கு தாவரக் கொழுப்பு ஏற்றதென்று அவர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள். இந்தப் பிராணிகள் கொழுப்பு அதிகமாவதனால் ஏற்படும் வியாதியால் ஆண்களைவிட பெண்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்களாம்.

பிராணிகள் கொழுப்பு அதிகம் உடலில் சேருவதால் அதிககாலம் வாழ முடியாது என்பது ஆராய்ச்சிகளின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. மிகக் கொடிய வியாதிகளான க்ஷயரோகமும், புற்று நோயும் இதனால் இரண்டாம் பட்ச நிலையை அடைந்து விடுவதாகத் தெரிய வந்திருக்கிறது. கொழுத்த ஆட்கள் அதிக காலம் ஜீவித்திருப்பதில்லை.

போதிய சத்துள்ள உணவு கிடைப்பதில்லை என்று குறை கூறப்படும் இந்நாளில் அதிக சத்துள்ள உணவை உட்கொள்ளலாமா என்ற பிரச்சினை எழுந்திருப்பது ஆச்சரியமாகவே இருக்கும். அதிக சத்துள்ள உணவு என்பதைவிடச் சரியான சத்துள்ள உணவு என்று கூறுவதே மிகவும் பொருத்தமாகும்.

ரீஜென்ஸ்பர்க்கிலும், ஆக்ஸ்பர்க்கிலும் நடைபெற்ற வைத்திய நிபுணர்கள் மாநாட்டில் பிராணிகள் கொழுப்பு உடலில் சேருவதால் ஹிருதயமும் ரத்தக் குழாய்களும் எப்படிப் பாதிக்கப்படுகின்றன என்பது விளக்கப்பட்டது.

இந்தப் பிராணிக் கொழுப்பினால் ஏற்படும் வியாதிக்கு "ஆர்ட்டெரியோ ஸெலிராஸிஸ்" என்று பெயர். இரத்தக் குழாய் உட்புறங்களில் 'கால்ஷியம்' என்ற சுண்ணாம்புச் சத்து படிய ஆரம்பித்து குழாய் வழி அடைபடவும் ஆரம்பித்துவிடும். பிராணிகள் கொழுப்பில் 'கொலஸ்ட்ரின்' என்ற சத்து உள்ளது. தாவரக் கொழுப்பில் இது கிடையாது. அதனால்தான் வைத்திய நூல்கள் தாவரக் கொழுப்பை உபயோகிக்கும்படி சிபார்சு செய்கின்றன.

எர்லான்ஜென் (பவேரியா) பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஹென்னிங்கும், டாக்டர் ஸ்கோனும் தாவரக் கொழுப்புகளிலுள்ள சில சத்துக்கள் இரத்

தத்திலுள்ள கொழுப்புகளையும் கரைப்பதாக உள்ளன என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்.

மிகவும் உழைத்து வேலை செய்பவர்கள் பிராணிகள் கொழுப்பை ஓரளவுக்கு அதிகமாகவே ஜீரணிக்கலாமாம். ஆனால் அதிக உடல் உழைப்பு இல்லாதவர்கள் பெரும் அளவுக்கு உடல் பயிற்சி செய்ய வேண்டும்.

பெண்கள் ஹார்மோன்களும், தைராய்டு நாளங்களும் இந்த இரத்தக் குழாய் அடைப்பினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. ஆண்களைவிடப் பெண்களே இதனால் அதிகம் பாதிக்கப் படுகின்றனராம். உணவைத் தவிர கோபம் அடிக்கடி ஏற்படுவது, மிகக் கடுமையான உழைப்பு, மனக் கிலேசம் இவைகள் காரணமாகவும் ''ஆர்ட்டெரியோ ஸெலீராஸிஸ்'' நோய் ஏற்படலாம்.

அதனால்தான் டாக்டர்கள் எல்லோரையும், முக்கியமாக ஆண்களை, அதிகக் கவலை கொள்ள வேண்டாம், குறைத்துச்சாப்பிடுங்கள், பிராணிக் கொழுப்பு அதிகம் சேர்க்காதீர்கள் என்றும், அதிகமாகப்புரதசத்துக்களைஉட்கொள்ளும்படியும் கூறுகிறார்கள். புகையிலை உபயோகிப்பதும் ஆபத்து. ஏனென்றால் அதிலுள்ள நிகோடைன் இரத்தக் குழாய்களை அடைக்கக் கூடியது.

ஆசிரியர்களுக்குப் பதில் டெலிவிஷன்

ஆசிரியர்கள் பஞ்சம் இப்போது ஜெர்மனியில் ஏற்பட்டுள்ளது. இதைச் சரிக்கட்ட பரீட்சார்த்தமாக டெலிவிஷன், டூயிஸ்பர்க் பள்ளி ஒன்றில் பரீட்சிக்கப்பட்டது. பள்ளிக் கூடமே டெலிவிஷன் ஸ்டூடியோவாக மாற்றப்பட்டு விட்டது. இந்தப் பரீட்சை மிக வெற்றிகரமாக நடைபெற்றது. ஒரு உபாத்தியாயரைக் கொண்டே ஏராள வகுப்புகளுக்குப் பாடம் நடத்திவிட முடிகிறதாம். டெலிவிஷன் திரை இப்போது மிகச்சிறியதாக இருக்கிறது. பெரிய திரை ஏற்படும்படியான டெலிவிஷன் செட்கள் இனித் தேவையாக இருக்கும்.

(யூ. பி. எஸ்.)

டெலிவிஷன் காரணமாக சினிமா பார்ப்பவர்கள் குறைவு.

மேற்கு ஜெர்மனியில் 1956-ம் ஆண்டு முதற்கொண்டே சினிமா பார்ப்பவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருகிறது. டெலிவிஷன் பார்ப்பவர்கள் எண்ணிக்கை ஏராளமாகப் பெருகி வருகிறது. 1961-ல் 80 கோடி சினிமா டிக்கெட்டுகள் விற்பனையாகி உள்ளன. கதைப் படங்க

-ளின் எண்ணிக்கை 79 ஆகவும், -டாகுமெண்டரிகள் 321 ஆகவும் குறைந்துவிட்டது. 1960-ல் 95 கதைப் படங்களும், 1959—ல் 106 கதைப்படங்களும் தயாரிக்கப்பட்டன. சினிமா பார்க்க வருபவர்களின் எண்ணிக்கை குறைந்தது காரணமாக தியேட்டர்கள் பல மூடப்பட்டன.

1957-ம் வருடம் முதல் டெலிவிஷன் செட்டுகள் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. இப்போது 70 லட்சம் டெலிவிஷன் செட்டுகள் மேற்கு ஜெர்மனியில் உள்ளன.

(யூ. பி. எஸ்.)

உயர்நிலைப் பள்ளிகளில் இனி இந்தி மொழிப் பரீட்சை இல்லை

அமைச்சர் பக்தவத்சலம் அறிவிப்பு

மாநிலத்திலுள்ள உயர் நிலைப்பள்ளிகளில் இனிமேல் இந்தித் தேர்வுகள் நடைபெறாது. இந்தி வகுப்புகள் மட்டிலும் நடைபெறுமே தவிர இனிமேல் இப்பாடத்தில் பரீட்சை நடைபெறாது. இந்தத் திட்டம் இந்த மார்ச் மாதமுதலே அமுலுக்கு வரும்.

சர்க்கார் மேற்கொண்டுள்ள இந்த முடிவைக் கல்வி மந்திரி திரு. பக்தவத்சலம் வெளியிட்டார்.

தற்போது பள்ளிகளில் இந்தி பரீட்சைகள் நடந்த போதிலும் கூட அந்தப் பாடத்தில் குறைந்த பட்சம் இவ்வளவு மார்க்குகள் தான் வாங்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. எனவே இந்நிலையில் இந்தியில் பரீட்சை நடத்துவதனால் செலவும் காலமும்தான் வீணாகிறது. எனவே சர்க்கார் இந்த ரீதியில் பரீட்சையே நடத்துவதில்லை என்று முடிவு செய்துவிட்டனர் என்று மந்திரி திரு. பக்தவத்சலம் குறிப்பிட்டார்.

ஆனால் இந்தி மொழிப் போதனை மட்டும் எப்போதும் போல் நடக்கும் என்றார்.

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர்: R. சேஷாத்திரி, B.A., B.T.

(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்	பாடப் பயிற்சி	திறவு கோல்
சென்னை	0·70 ந. பை.	0·50 ந. பை.
செங்கற்பட்டு	0·75 ந. பை.	,,
வட ஆற்காடு	0·75 ந. பை.	,,
தென் ஆற்காடு	0·75 ந. பை.	,,
சேலம்	0·75 ந. பை.	,,
கோயம்புத்தூர்	0·75 ந. பை.	,,
நீலகிரி	0·75 ந. பை.	,,
திருச்சிராப்பள்ளி	0·75 ந. பை.	,,
தஞ்சாவூர்	0·75 ந. பை.	,,
மதுரை	0·75 ந. பை.	,,
இராமநாதபுரம்	0·75 ந. பை.	,,
திருநெல்வேலி	0·75 ந. பை.	,,
கன்னியாகுமரி	0·75 ந. பை.	,,
ஐந்தாம் வகுப்பு	0·94 ந. பை.	,,
ஆறும் வகுப்பு	0·87 ந. பை.	,,
ஏழாம் வகுப்பு	0·75 ந. பை.	,,
எட்டாம் வகுப்பு (E. S. L. C.)	0·62 ந. பை.	,,
எட்டாம் வகுப்பு (புதியபாடத் திட்டப்படி)	ரூ. 1·25 ந. பை.	,,
ஒன்பதாம் வகுப்பு	ரூ. 1·25 ந. பை.	0-75 ,,
பத்தாம் வகுப்பு	ரூ. 1·50 ந. பை.	

பாடப் பயிற்சி திறவு கோல்

(Key to Social Record)

4வது வகுப்பு முதல் 10வது வகுப்பு வரை சமூகப் பாடப் பயிற்சிகளுக்குத் திறவுகோல் போட்டிருக்கிறோம். பாடசாலைகளில் பலவிதமான கம்பெனிகளின் சமூக பாடப்புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சில புத்தகங்களில் பயிற்சிப் புத்தகங்களில் கேட்கும் வினாக்களுக்கு விடை கிடைக்காமல் போகலாம். சில ஆசிரியர்களுக்கு உடனே விடை கொடுக்கச் சிரமம் ஏற்படலாம். இதை யெல்லாம் யோசித்து எமது பாடப்பயிற்சிகளுக்கு வினா விடைகள், விளக்கங்கள் கொண்ட திறவுகோல்

எல்லா வகுப்புகளுக்கும் வெளியிட்டிருக்கின்றோம். இது முக்கியமாக ஆசிரியர்கள் கையில் இருக்கவேண்டிய புத்தகமாகும். ஆதலால் திறவுகோல் இனமாக எமது பயிற்சி நூல் வைத்துள்ள பாடசாலைகளுக்கு அனுப்பிவருகிறோம். சிலர் பிள்ளைகளுக்கும் விடையை வாங்கிக்கொடுத்து வருகிறார்கள். அது சிறந்த முறையல்ல. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட திறவுகோல் வேண்டுபவர்களுக்கு எட்டணா (50 ந. பை.) பிரதிக்கு வீதம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். பாடப்பயிற்சிகள் ஆர்டர் கொடுப்பவர்களுக்கு வகுப்புவாரி ஒரு திறவுகோல் பயிற்சிகளோடு இனமாக அனுப்பிவைக்கப்படும்.

மானேஜர்,
அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,
சென்னை-1.

59-ம் பக்கத் தொடர்ச்சி

பிரஸ்தாபிக்கப்பட்ட சென்னை பென்ஷன் விதிகளின்படி சர்க்கார் உத்யோகஸ்தர்களுக்குக் கிடைக்கும் குடும்ப பென்ஷன் சலுகையை மானிய உதவி பெறும் பள்ளிக் கூடங்களிலும் ஸ்தல ஸ்தாபன பள்ளிக்கூடங்களிலும் உள்ள ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கிறது.

ஸ்தல ஸ்தாபன பள்ளிக்கூடங்களிலும் மானிய உதவி பெறும் பள்ளிக் கூடங்களிலும் உள்ள ஆசிரியர்களுக்கு குடும்ப பென்ஷன், சர்க்கார் பள்ளிக்கூடங்களில் அதே அளவு சர்விஸ் உள்ள ஆசிரியர்களின் குடும்பத்துக்கு பென்ஷனில் பாதியாக ஏன் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. என்பதை விளக்கி சர்க்கார் உத்தரவு கூறுவதாவது :—மானிய உதவி பெறும் பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கான பிராவிடண்ட் பண்ட் திட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு சர்க்கார் கொடுத்து வந்தது.

பென்ஷன் விதிகளின் கீழ் சர்க்கார் சர்வீசில் உள்ள ஆசிரியர்களுக்கு பிராவிடண்ட் பண்ட் அனுகூலம் கிடையாததாலும், மானிய உதவி பெறும் பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்கள், சர்க்கார் உத்தியோகத்தில் உள்ளவர்களைவிட அதிக பென்ஷன் பெற அனுமதிக்கக் கூடாது என்று சர்க்கார் கருதுவதாலும், மான்ய உதவிபெறும் பள்ளிக்கூட, ஸ்தல ஸ்தாபன பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு பிராவிடண்ட்பண்டுக்கு சர்க்கார் அளிக்கும் தொகையும் சேர்த்துசர்க்கார் உத்யோகத்தில் உள்ள ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் பென்ஷனைவிட அதிகம் போகாமலிருக்க உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார்.

Edited Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

ஆசிரியர் : இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	5	0	10	28-5-'58
இரண்டாம் வகுப்பு	0	6	0	5	28-5-'58
மூன்றும் வகுப்பு	0	8	0	5	28-5-'58
நான்காம் வகுப்பு	0	12	0	21	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	1	0	0	13	18-5-'60

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	0	8	0	...	...
மூன்றும் வகுப்பு	0	12	0	43	13-5-'59
நான்காம் வகுப்பு	0	14	0	25	13-5-'59

ஆசிரியர் : A. C. பாலசுந்தரம், B. A., L. T.

ஐந்தாம் வகுப்பு	1	4	0	39	18-5-'60

சிறுவர் சமூக நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	0	10	0	...	...
மூன்றும் வகுப்பு	0	12	0	...	...

ஆசிரியர் : த. சே. உமாபதி, M. A., L. T.

நான்காம் வகுப்பு (மாவட்ட வாரியாக)	1	14	0	44-46	13-5-'59
ஐந்தாம் வகுப்பு	1	12	0	43	18-5-'60

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர் : K. லக்ஷ்மிநாராயணசாமி, B. A., L. T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஐந்தாம் வகுப்பு	1 4 0	26	18-5-'60

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	0 6 0	...	...
மூன்றாம் வகுப்பு	0 7 0	...	...

ஆசிரியர் : M. விவேகானந்தா, B. Sc., L. T.

நான்காம் வகுப்பு	0 10 0	30	13-5-'59

துணைப் பாட புத்தகங்கள்

சிறுவர் அறிவுக் கதைகள்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

ஐந்தாம் வகுப்பு	0 8 0	15	18-5-'60

நீதிக் கதைகள்

ஆசிரியர் : வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

ஐந்தாம் வகுப்பு	0 8 0	17	18-5-'60

Venkatesan Press, Madras-1.